# ஜய விஜயம்

மலர்-1 இதழ்-5.6

ஆக. ஸெப். அக் - 1927.

ஆவணி, புரட்டாசி.

JL
J684m211,N27
N27.1.5-6
159608

651

Registered No. M. 2260.

166

பிரபவ ௵
மலர் 1

ஆவணி-[illegible]
இதழ்கள் 5, 6.

No. ———
1-NOV 1927
MADRAS

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்தி லிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை.

THE

# CARDAMOM PLANTER,

**THE ORGAN**
**of**
**The Travancore Cardamom**
**Planters' Association.**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# பொருள் அடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா | 142 |
| 3. | திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி | 151 |
| 4. | புருக் பாண்டுக் கம்பெனியின் முடிவு | 162 |
| 5. | கூட்டு வியாபாரம் | 167 |
| 6. | எனது அநுபவம் | 174 |
| 7. | திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம் | 183 |
| 8. | மைசூர் மன்னரின் ஸ்ரீமுகம் | 193 |
| 9. | புத்தர் பிரானது அமிர்த மொழிகள் | 194 |
| 10. | ஒரு விளம்பரம் | 195 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்கு சந்தா | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8—0 |

குறிப்பு:—

வியாசம் எழுதுவோர்கள் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். விஷயங்களுக்கு வியாசதாரிகளே பொறுப்புதாரி.

# ஏல விவசாயி.


திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.



| மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ ௵ ஆவணி ௴<br>1927 ௵ ஆகஸ்டு-செப்டெம்பர் ௴ | இதழ் 5 |
|---|---|---|


## ஆசிரிய விருத்தம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம். (தாயுமானவர்)

159608

## திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தின்

# 1வது ஆண்டு விழா

தேவாரம்.

1922.

உபசரணைச் சபைச் சேர்மன் தேவாரம் ஜமீன்
மானேஜர் மகா-௱-௱-ஸ்ரீ கனம்

## T. K. நாகையஸ்வாமி அவர்களின்

## பிரசங்கம்.

N27-1.5-6

கனவான்களே!

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளது திருவருளை முன்னிட்டு நமது திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தின் வருஷாந்திரப் பொதுக் கூட்டத்தை இனிது நடத்தும் பொருட்டு சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூன்று பிரதம நாயன்மார்களால் பாடப்பெற்ற தமிழ் வேதமாகிய தேவாரம் என்ற சைவ நூலின் பெயராலேயே திருநாமம் சூட்டப்பட்ட இந்நகரத்திற்கு, விஜய நகரத்தின் பெயர்பெற்ற மகா வீர, தீர, கம்பீர, கீர்த்திப் பிரதாப கிருஷ்ண தேவராயருடைய மரபினர்களால் தலைமை ஸ்தானம் வகிக்கும் இந்நகரத்திற்கு, தென்னிந்தியாவில் கீர்த்தி வாய்ந்த நாயக்க அரசாங்கத்தாரின் பாளையப்பட்டுகளில் ஒன்றின் தலைமை நகராயிருந்து, தற்சமயம் தேவாரம் ஜமீனுக்கே முதன்மையாக விளங்கும் இந்நகரத்திற்கு, வாலிப இயக்கத்தில் சிறந்து விளங்கும் இந்நகரத்திற்கு, புராதன ஆலயங்களுள்ள இந்நகரத்திற்கு, நிலவளம், மலைவளம்கொண்ட இந்நகரத்திற்கு, பொது விஷயங்களில் மிக்க ஆர்வமுடைய இந்நகரத்திற்கு, அளவில் சிறியதா



யிருப்பினும் ஆற்றலில் அதிகமாயிருக்கும் இத்தேவாரத்திற்கு அநேக பொது விஷயங்களில் ஈடுபட்டவரும், பரோபகாரமே பூஷணமெனக் கங்கணம் கட்டிக்கொண்டவரும், யூனியன் போர்டுத் தலைவராகவும், தாலுகா போர்டு மெம்பராகவும் இருந்து பொது ஜனங்களுக்கு உழைத்துக் கொண்டு வருபவரும், நமது ஆண்டு விழாவிற்கு அக்ராஸ்தானம் வகிக்க இப்பொழுது தன் சொந்தக்காரியங்களை யெல்லாம் விட்டு விட்டு முன் வந்தவருமான பேரையூர் ஜமீன்தார் மகா-௱-௱-ஸ்ரீ மகாகனந்தங்கிய முத்து விஜய ரகுநாதகோடுமுடி தும்பையசாமி தும்பச்சி பாண்டியர் அவர்களையும், பொது நன்மையே தனது நன்மையென்று கருதுபவரும், அவருடைய குடிகளின் க்ஷேமத்தைக் கருதிச் சதா உழைத்துக்கொண்டிருப்பவரும், "என் ஜமீன் குடிகளின் இன்பமே எனது இன்பம் அவர்கள் துன்பமே எனது துன்பம்" என்று எண்ணுபவரும், அநேக எளிய மாணவர்களுக்கு அன்னதாதாவும், போடிநாயக்கனூர் ஹைஸ்கூல் கமிட்டிக்கு அக்ராசனராக விருந்து அநேக ஆண்டுகளாக உழைத்து, இப்பக்கங்களில் கல்வியை விர்த்திசெய்து கொண்டு வருபவரும், ஹை ஸ்கூல் பழைய மாணவர் சங்கத்திற்கு (O. B. A.) தலைவராக இருந்து உற்சாகத்துடன் வேலைசெய்து படித்த வாலிபர்களுக்கு உற்சாகம் உண்டாக்கி, அவர்களை ஒற்றுமை செய்துகொண்டு வருபவரும், நமது திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தின் முதன்மை பெற்ற ஸ்தாபகரும், இப்பொழுது அதற்கு அக்கிராசனாதிபதியும், குணக்குன்றுமாக விளங்குபவருமான போடிநாயக்கனூர் ஜமீன்தார் மகா-௱-௱-ஸ்ரீ மகாகனம் தங்கிய காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்களையும், போடிநாயக்கனூர் ஹைஸ்கூலுக்குத் தனாதிகாரியும், ஏல விவசாய சங்கத்தின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவரும், (இப்பொழுது சங்கத்தின் போஷகர். தற்சமயம் ஏலவிவசாயிகள் சங்கத்திற்கு அச்சாணி போன்றிருக்கிறார்) பல லட்சம் படைத்த பிரபு என்று தென்னிந்தியா பூராவும் கியாதி வாய்ந்தவரும், பலவித பொது ஸ்தாபனங்களுக்குத் தக்கபடி பண உதவி செய்து அவைகளை நன்கு நடை

பெறச் செய்து கொண்டிருப்பவரும், போடிநாயக்கனூர் நகரச் சபைக்கே திலகம் போன்றவரும், பெரிய மிராஸ்தாரரும், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளில் இத்தாலுகாவிற்கே வியாபார அரசர் போன்றவரும், ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும் பலருக்கும் வேலைகள் கொடுத்து உதவி செய்பவரும் ஆன போடிநாயக்கனூர் முனிசிபல் சேர்மன் மகா-ள-ள-ஸ்ரீ கனம்தங்கிய அழகணன் செட்டியார் அவர்களையும், (இப்பொழுது ராவ் சாகிப்) நம்முடைய சங்க முன்னேற்றத்திற்கு முதல் அடையாளமாகும் ஆண்டு விழாவாகிய இச்சமயம் தங்களருமையான நேரத்தையும், சிரமத்தையும் சிறிதும் பொருட்படுத்தாது போது நலம் காட்டி இங்கே பிரியத்துடன் விஜயம்செய்திருக்கும் மற்ற கௌரவமிக்க கனவான்களையும் மிக்க கண்ணியத்துடனும், அன்புடனும் முகமன்கூறி தேவாரத்தின் பெயரால் நல்வரவேற்று, வாழ்த்துக்கூறுகிறேன். உங்கள் எல்லோருடைய வரவும் நல்வரவாகுக. இவ்விடத்தில் தங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இடங்களும், ஏனைய வசதிகளும், மற்றும் பிறவும் உங்களுடைய கௌரவத்திற்குத் தக்கபடி இல்லையாயினும், அவைகள் அனைத்தும் தங்களுடையவைகளாகப் பாவித்து, மனதுவந்து, ஏற்றருளுமாறு தங்களை, மிக்க மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் நகரவாசிகளென்று இப்பொழுது பெருமைக்காகக் கூறிக்கொண்டபோதிலும், நாங்கள் கிராமவாசிகள் என்பது தாங்கள் எல்லோருக்கும் தெரியாததல்ல. எங்கள் தேவாரம் உண்டான காலமுதல் நாளிது வரையில் இப்பெருங்கூட்டம் போன்று இங்குக் கூடியதில்லையென்று என்னுடைய ஞாபகத்திற்கு எட்டியவரையில் நினைத்து என்னுடைய அற்ப அறிவைக்கொண்டும், சொற்ப ஞாபகத்தைக்கொண்டும் சொல்லுகிறேன். தங்கள் போன்ற பெரியோர்களை முன்பு உபசரித்து எங்களுக்கு அதிக அனுபவம் கிடையாது. எதையும் நாங்கள் அன்புடன் தங்களுக்காகச் செய்கிறோம்; செய்யக்காத்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் உபசரணையில் தெரிந்தோ, தெரியாமலோ நாங்கள் செய்த பலவகைக்



குற்றங்களை மன்னித்து, அவைகளை மறந்து, குணங்களை மட்டும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அறிஞர்கள் கூடியிருக்கும் கௌரவமிக்க சபையோர்களே, என் பிரிய சகோதரப் பிரதிநிதிகளே

என்னைக்காட்டிலும் அறிவிலும் ஆற்றலிலும், வயதிலும் அதிகமுடைய பலர் இந்நகரத்தில் இருப்பினும் உங்கள் எல்லோரையும் வரவேற்கும் அரிய பெரிய பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்காக அளவற்ற ஆனந்தம் அடைகிறேன். திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா தேவாரத்தில் நடைபெறப் போகிறதைப் பற்றித் தேவாரத்து ஜனங்களடையும் மகா மகிழ்ச்சியைச் சந்தோஷத்துடன் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நம் சங்கம்.

ஆதிகாலம் முதற்கொண்டே நம்தேசம் சங்கங்கள் பலவற்றினால் மேன்மையுற்றிருந்தது என்று சரித்திர ஆராய்ச்சியினால் அறிகிறோம். சந்திரகுப்தன், அசோகன், விக்ரமார்க்கன், போஜன், சேர, சோழ, பாண்டிய அரசர்கள் முதலியவர்கள் காலத்திலும் குடிகள் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி, மேற்படி சபைகள் மூலமாகவே விவசாயம், வியாபாரம், நியாய பரிபாலனம் முதலான விஷயங்களை நன்கு பரிபாலித்து வந்தார்கள். நமது தென்னாட்டுச் சரித்திரத்தில்கூட பற்பல சாது சங்கங்களைப்பற்றியும், வித்தியா சங்கங்களைப்பற்றியும் அறிகிறோம். நம்முடைய முன்னேற்றத்தைக் கருதி, நம்முன்னோர்கள் அனுசரித்து வந்த முறைபோன்று, திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாகையால், நாமடைந்த, நாமடைந்து கொண்டிருக்கிற நன்மைகள் ஒன்றல்ல, இரண்டல்ல, பலப் பலவாகும். ஏலக்காயின் விலையை உயர்த்த வழிகள் கண்டுபிடித்தோம். நமது பொருளாதார நிலையைச் சற்று சீர்திருத்தம் செய்திருக்கிறோம்.

கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தி, ஏல விவசாயிகளுக்கிடையில் ஐக்கியத்தை உண்டுபண்ணியிருக்கிறோம். நம்மில் நூதன உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. இப்பொழுது தான் நம்மை மற்றவர்கள் உணர வருகிறார்கள். வியாபாரிகள் நமது இரும்பு நேர் திடசித்தத்தைக் காண்கிறார்கள். ஒரு வருஷத்திலேயே நாம் இவ்வளவு நன்மைகள் அடைவோமானால், எப்பொழுதும் இவ்வாறு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்து கொண்டே போனால் நாமடையப் போகும் பிரயோஜனங்கள் இவ்வளவு தானென்று வரையறுத்துச் சொல்ல முடியாதென்பது தங்களெல்லோருக்கும் நன்கு தெரியலாகும்.

## சாஸ்திரீய விவசாயம்.

இயேசு கிறிஸ்து நாதர் பிறப்பதற்கு எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு நம்முடைய தேசத்திலிருந்து பாபிலோன் என்ற பட்டினத்திற்கு வாசனைத் திரவியங்கள் அனுப்பப்பட்டு வந்ததாக புராதன ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஏலம், கிராம்பு, வால்மிளகு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, மிளகு முதலியவைகளை மலையாளத்திலிருந்து வாங்குவதற்காகவே அக்காலத்தில் போர்த்கியர்கள் முதலிய ஐரோப்பிய வர்த்தகர்கள் நமது தேசத்திற்கு வந்தார்கள். மேற்கண்ட வாசனைச் சாமான்களை உலகினுக்கே அளித்த நம்மிந்தியா இப்பொழுது தனது பண்டைப்பெருமை பலவழிகளில் கெட்டு அடிமையில் மூழ்கிக்கிடக்கிறது. இப்பொழுது நாம் செய்யவேண்டியதென்ன? விற்பனையைக் கவனிக்கும் பொழுதே உற்பத்தியையும் கவனிக்க வேண்டும். இந்தியாவில் மொத்த ஜனத்தொகையில் முக்காற் பங்குக்குமேல் விவசாயிகளாயிருப்பதால் நாம் விவசாயத்தில் நல்ல கவனம் செலுத்தவேண்டும். நூதன முறைகளைக் கண்டுபிடித்து, அவைகளைப் பிரயோகிக்க தீவிர முயற்சி செய்யவேண்டும். தற்சமயம் ஏலச் செடிகளுக்கு பலவித நோய்கள் உண்டாகி யிருக்கின்றன. அவைகளுக்குத் தக்க பரிகாரங்கள் தேடவேண்டும். விவசாய நிபுணர்களுடைய



யோசனைகளை நாடிக் கவனித்து, அவர்களின் யோசனையின்படி செய்யவேண்டும். கிருஷி இலாக்காவிற்கும் நமக்கும் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, ஸ்விடன், ஜப்பான் முதலான தேசங்களில் சாஸ்திரீய விவசாயம் செய்வதால் அவர்கள் உலகம் போற்றும் செல்வந்தர்களாகவும், கைத்தொழில்களில் வல்லவர்களாகவும் இருக்கிறார்கள். விவசாயம் ஒப்பற்ற தொழிலென்று கருதியே ஔவைப்பிராட்டியாரும், கம்பர் முதலிய கவிவாணர்களும் அத்தொழிலை மிகப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுது ஏலச்செடிகளுக்கு உண்டாயிருக்கும் நோய்களைத் தடுக்கவும், நல்ல இலாபமடையவும் நல்ல நவீன முறையில் கிருஷி செய்யவேண்டும்.

## பாங்க்.

ஏல விவசாயிகளுக்கென்று பிரத்தியேகமாக ஒரு பாங்க் ஏற்படுத்தவேண்டும். அதன் மூலமாக நமது பொருளாதார நிலைமையை விருத்தி செய்யவேண்டும். மகசூல் முதலெடுப்புச் சமயத்தில் சாதாரண விவசாயிகள் பணத்திற்காகப் படும் கஷ்டங்கள், கவலைகள் கொஞ்சமன்று. நமது சங்கத்தினர்களால் ஒரு பாங்க் ஸ்தாபிக்க வேண்டுமென்று முன்னமேயே தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், அதைத் திறக்கத் தீவிரமாக வேலை செய்ய முன் வரவேண்டும். பாங்க் ஏல விவசாயிகளுக்கு ஏற்றவாறு எக்காலத்தில் உண்டாக்கப்படுகிறதோ, அக்காலமே இச்சங்கத்திற்குச் சுபகாலங்களில் ஒன்றாகும். இந்த பாங்க் மூலமாகவே நமது கைத்தொழில்களைக்கூட விர்த்தி செய்யலாம். மைசூர் சமஸ்தானத்தில் சந்தன மரங்கள் ஏராளமாக இப்பொழுது பயிர் செய்யப்படுகின்றன. அங்கே சந்தனக் கட்டையிலிருந்து சந்தனத் தைலம் எடுத்து, அதை அன்னிய விடங்களுக்கு அனுப்புகிறார்கள். அது போலவே நாமும் நம்முடைய ஏலக்காயை விற்காமல் ஏலக்காய் திராவகத்தை விற்கக்கூடிய காலம் வரும். அக்காலமும் சமீபத்தில் வந்து கொண்டிருக்கிறது.

## ஏலக்காய் விற்பனை.

ஏலக்காய் விற்பனையை முன்னிட்டே இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்று எல்லோருக்கும் நன்கு தெரியும். நமது ஏல விற்பனையின் கட்டுப்பாட்டாலும், திட்டத்தாலும் நாம் எவ்வளவோ லாபமடைந்திருக்கிறோம். இதைக் கண்டு நிதானமின்றி நாம் திடீரென்று விற்பனையின் திட்டத்தை அதிகமாக உயர்த்தத் தயாராக இருக்கக்கூடாதென்று என் சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. இவ்விஷயத்தைப்பற்றி இம்மகா நாட்டில் நன்கு ஆலோசனை செய்யக்கூடுமாகையாலும், இதைப்பற்றிப் பலர் பேசக்கூடுமாகையாலும் நான் இதைப்பற்றி விவரிப்பது வீண் காலப்போக்காகுமென்று இம்மட்டில் இதை விடுகிறேன்.

## பிரசாரகர்கள்.

நம்முடைய விஷயங்களைப் பரப்புவதற்குப் பிரசாரம் இன்றியமையாதது. பொது ஜனங்களுக்குச் சங்கத்தின் மேன்மைகளையும் நன்மைகளையும், ஒற்றுமையின் பலத்தையும், பயன்களையும் தக்க வழிகளில் போதித்து, அவர்களுடைய மனதைக் கவர்ந்து, அவர்களுடைய ஆதரவைப் பெறுமாறு, ஏற்ற பிரசாரகர்களை நியமித்து, ஏல விவசாயிகளுள்ள கிராமங்கள் தோறும் அடிக்கடி செல்லுமாறு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். தெரியாதவர்களுக்கும் விஷயங்களைத் தெரிவித்து, அவர்களையும் தெரிந்தவர்களாக்குவது நமது சங்கத்தின் கடமையாகக் கொள்ளல் வேண்டும். எத்தனையோ இயக்கங்கள் நம் நாட்டில் இப்பொழுது பரவிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு இயக்கத்திற்கும் பிரசாரகர்கள் கணக்கற்றிருக்கிறார்கள் இதை விரிக்கில் பெருகும்.



## சங்கமும் சர்க்காரும்.

நம்முடைய கஷ்ட நஷ்டங்களை நீக்க வேண்டுமென்று நாம் சங்கத்தின் மூலமாக விண்ணப்பங்கள் செய்கிறோம். கனம் திவான்ஜி இப்பக்கங்களில் விஜயம் செய்திருக்கும் சமயத்தில் நாம் பிரதிநிதிகளை அனுப்பிக் கஷ்டங்களை நிவர்த்திக்குமாறு கேட்டோம். என்ன பலனைக் கண்டோம்? ஒன்றுமில்லையென்று தைரியமாகக் கூறலாம். ஏல விவசாயிகளுக்குப் பாதகமாகச் சட்டங்கள் ஏற்படுத்தும்போதெல்லாம் நாம் சர்க்காருக்குப் பிரதிநிதிகள் அனுப்பிக் காரியம் சித்தியடையும் பரியந்தம் தளராச் சிந்தையுடன் பாடுபடவேண்டும்.

## சங்கமும், சட்ட சபையும், ஸ்ரீ மூலம் பிரஜா சபையும்.

மதராஸ், பம்பாய், பங்காளம் முதலிய இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலுமுள்ள சட்ட சபைகளிலும் விவசாயிகளிலிருந்தும் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். சில சட்டசபைகளுக்குத் தோட்டக்காரச் சங்கங்களே பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புகின்றன. திருவாங்கூர் ஸ்ரீ மூலம் பிரஜா சபையிலும் 3, 4 ஐரோப்பியத் தோட்டக்காரச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஸ்தானங்கள் வகிக்கிறார்கள். சட்ட சபையின் மூலமாக நம்முடைய பல குறைகள் தீர வேண்டியிருக்கிறபடியால், நம் சங்கத்தின் பிரதிநிதிகள் மேற்கூறிய இரண்டு சபைகளிலும் ஸ்தானங்கள் அடைய நாம் மகா ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைக்க வேண்டியிருக்கிறது. நாம் எத்தனையோ தடவைகளில் இம்முயற்சியில் தவறினும் அதைரியம் அடையாது, பாடுபடத் தீவிரமாக முன்வர வேண்டும். நம் பிரதிநிதிகள் சட்ட சபையிலும், பிரஜா சபையிலும் சங்கத்தின் பெயரால் ஸ்தானங்கள் வகிக்கும் நாளே நமது சங்கம் உன்னத நிலைமை அடைந்த நாளாகக் கருதப்படும் ஆகையால் இவ்விஷயத்தில் பிரத்தியேகக் கவனம் செலுத்தி

ஒவ்வொரு அங்கத்தினரும் உழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## முடிவுரை.

கனவான்களே, பெரியோர்களே, நீங்கள் இது வரையும் சலியாது, நான் ஆய்ந்து ஆலோசிக்காமல் அவசரத்தில் எழுதிய என் புன் சொற்களைப் பொறுமையுடனும், அன்புடனும் இருந்து கேட்டதற்காக நான் எனது மனப்பூர்ணமான வந்தனத்தை உங்கள்பால் செலுத்துகிறேன். நம்முடைய தாழ்மையான வேண்டுகோளுக்கிணங்கி, நமது சங்கத்தின் முதலாவது ஆண்டுப் பூர்த்தி விழாவிற்குத் தலைமை வகிக்கப் 'பேரையூர் ஜமீன்தாரர் மகா-ள-ள-ஸ்ரீ மகாகனம் தங்கிய முத்து விஜய ரேகுநாத கோடு ஏடி தும்பைய ஸ்வாமி தும்பச்சிப் பாண்டியர் அவர்கள் நமக்குக் கிடைத்தது நாம் செய்த புண்ணியமே. அவருடைய ஒப்பற்ற யோசனைகளை நன்கு கேட்டு அவைகளை நாம் பின் பற்றுவோமாக. இச்சபையில் அக்கிராசனம் வகிக்குமாறு அவர்களை மிக்க வணக்கத்துடன் கேட்டுக்கொண்டு, எனது இந்த அற்ப சொற்பொழிவை, மீண்டுமொரு தடவை ஒவ்வொருவருக்கும் வந்தனமளித்துவிட்டு முடிக்கிறேன்,

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:— வரவேற்புக் கமிட்டித் தலைவரவர்களின் உத்திரவின்படி வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசி R. நாராயணஸ்வாமியால் சபை முன் வாசிக்கப்பட்டது.



# திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, கோம்பை.

ஆதியில் ஆங்கிலேயர்கள் இருந்த அதி கேவலமான, மிலேச்ச நிலைமைக்குப் பின்பு, அவர்களின் மிகு விவேக, விற்பன்ன சக்தியாலும், ஊக்கமோடும், உறுதியோடும் உழைத்த உழைப்பாலும், பல அரிய பெரிய விஷயங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று அடங்கா ஆசை கொண்டு, இடைவிடாது முயன்று, ஆராய்ச்சி செய்ததின் நேர்மையாலும், ஒவ்வொரு விஷயத்திலும் அதிக கருத்தைச் செலுத்தி, அநேக நுட்பங்களைத் தெரிந்து கொண்ட தன்மையாலும், "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பதைக் கடைப்பிடித்து, கடல்களையும், வனம் வனாந்தரங்களையும் தாண்டி, பொருள் உண்டாக்கப் பற் பல வழிகளைக் கண்டறிந்த திறத்தாலும், உலகத்தின் பல தேசங்களுக்குத் தைரியத்துடன் சென்று, அத்தேசத்தினர்களைச் சூழ்ச்சிகளால் வென்ற சமயோஜித ராஜ தந்திரத்தாலும், இன்னும் அவர்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கும் நுட்ப புத்தியாலும், ஊக்கத்தாலும், விடா முயற்சியாலும், இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுடைய ஒப்பற்ற ஒற்றுமையின் சக்தியாலும் உலகத்தின் ராஜீய காரியங்களிலெல்லாம் முதன்மையாகவும், வல்லரசுகளில் ஒரு தேசத்தினராகவும், வியாபாரத்தில் அரசர்களாகவும், கைத்தொழிலில் நிபுணர்களாகவும், விவசாயத்தில் விற்பன்னர்களாகவும், வேறெத்துறைகளிலும் முன்னவர்களாகவும் விளங்குகிறார்கள் ஆங்கிலேயர்கள்.

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட உலகத்தில் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளைப்பற்றிக் கவனித்தாலோ, அத்தேசத்

தின் செல்வம் ரொக்கமாக 1,821,000,000,000 டாலர் (டாலர் = ரூ 3-2-0) இருக்கிறதாம். அந் நாட்டிலுள்ள நிலங்கள், ஆடு மாடுகள், இயந்திரங்கள், விவசாயம், சுரங்கம் முதலியவை சம்பந்தமான உற்பத்திகளையும் ஏனையபிறவும் கணக்கிட்டால், உலகத்தின் செல்வத்தில் அது மட்டும் 5ல் 1 பாகமாக விளங்குகிறதென்று ஒரு பொருளாதார நிபுணர் கூறுகிறார். "நமது அபார ஆஸ்தி ஜனங்களிடமேயிருக்கிறது. இந்த ஜனங்களுக்கு கல்வி கற்பிப்பதே நமது மகா பெரிய வேலையாகும். ஜனங்களே நமக்கு முக்கிய ஆஸ்தியாகும்" எனக் கூறுகிறார் டாக்டர் ஹாபிடப்ளின் என்பார். "ஆளைத்தேடி ஆஸ்தியைத் தேடு" என்பது தமிழகத்தின் நாட்டுப் பழமொழியாகும்.

அயர்லாண்டு தேசம் எத்தனையோ வருடங்களாகச் சுய ஆட்சி அடைவதற்காகப் பாடுபட்டுக்கொண்டு வருவது உலகம் அறிந்த விஷயமாகும். பொருளாதார சுதந்திரம் அடையாது, ராஜீய சுதந்திரம் பெற்றும் பயனில்லை யென்று பிளான்கெட் என்பவர் எண்ணி, ஐக்கிய இபக்கத்தின் மூலமாக நன்கு வேலை செய்து விவசாயிகளையும், தொழிலாளர்களையும் கைதூக்கி விட்டுத் தேசத்தில் செல்வத்தை நிலைக்கச் செய்தார்.

ஜப்பானியர், சில சிறிய தீவுகள் அடங்கிய ஒரு சிறு தேசத்தில் வசிப்பினும், அவர்களுடைய உழைப்பு, உற்சாகம், ஊக்கம், நுண்ணறிவு முதலியவைகளைக் காட்டிலும், அவர்களின் ஒற்றுமையால் வல்லரசுகளில் ஒன்றாகவும், அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் அவர்களைக்கண்டு பொறுமையடையும்படியாக செல்வத்தில் சிறந்து, வீரத்தில் மிகுந்து, தீரத்தில் அதிகமாகி, செல்வாக்கில் உயர்ந்து, உலகம் மதிக்கும்படியாக வாழ்கிறார்கள். பொருளாதார சுதந்திரம் வாழ்க்கையில் இன்பம் உண்டாக்கும் என்று கூறுகிறார் எல்பர்ட் ஹப்பார்டு. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பது வள்ளுவர் வாக்கு. உலகத்தில் பல நாட்டார்கள் செல்வத்தில் சிறந்து விளங்க, இந்தியர்கள் எந்நிலைமையில் இருக்கிறார்களென்று சற்று ஆராய்வோம்.



பொன் விளையும் நாடெனவும், கற்பக நாடெனவும் புகழப்பெற்ற நமது பரத கண்டம், பலவகை ஏற்றங்களும், இயற்கை வளங்களும், வனப்புகளும் வாய்ந்த நமது மாதுரு பூமி, "இல்லை" என்று வந்தவர்களுக்கு இல்லை என்னாது கொடுத்து உதவிய நமது ஜென்ம தேசம், அநேக விஷயங்களில் உலகத்திற்கே மகுடமணியாக விளங்கிய நமது தவத்தாய் நாடு, அருளுடைய தவமக்கள், அறிவுடைய மேன் மக்கள், ஆவேசமுடைய வீர மக்கள், ஆற்றலுடைய அரிய மக்கள், ஆயிரம், ஆயிரமாக அவதரித்து, அவனிக்கே அறிவுச் சுடர் அளித்த அருமைத்திரு நாடு, "தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த நாடு," உலகத்திற்கே உணவளித்த நாடு, இப்பொழுது அடிமைப்பட்டு, அளவற்ற தரித்திரத்தை அடைந்து அவஸ்தையுற்று உண்ண உணவின்றிக் கஷ்டப்பட்டு, மலேயா, பீஜி, தென்னாப்பிரிக்கா, கானடா முதலிய தேசங்களுக்குப் போய் வயிறு வளர்க்கும் பொருட்டு நாழி அரிசிக்காக படும் பாட்டை அயல் நாட்டினர்கள் கண்டு நமது புராதனப் புனித வாழ்க்கையையும், நமது பண்டைப் பல, பல பெருமைகளையும் அறவே மறந்துவிட்டு, கோடி கோடிப் பவுன் பெறும் எவ்வளவோ வஸ்துக்களை எத்தனையோ தேசங்களுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்த விஷயத்தைக் கவனிக்காது, நம் தேசத்தை கூலிக்கார தேசம் என்று அழைப்பதிலிருந்து தேசம் அடைந்திருக்கும் சீர் கேடான நிலைமையை ஒரு வழியில் நாம் அறிகிறோம். 18 நூற்றாண்டுகளுக்கு முன் நம் நாட்டிற்கு வந்து சென்ற பிளினி, டாலமி, பெரிப்ளஸ், ஸ்ட்ராபோ முதலிய அயல் நாட்டார்கள் எழுதிய குறிப்புகளில் நமது வாணிபத்தை மெத்தவும் சிலாகித்திருக்கிறார்கள். "இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பண்டங்கள் ரோம் ராஜ்பத்தில் நூறு மடங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன" என்று பிளினி கூறுகிறார். இவ்விதமாக முற்காலத்தில் அருமையான, ஆச்சர்யமான இயற்கைப் பொருள்களையும், செயற்கைப் பொருள்களையும் அயல் நாடுகளுக்கு அளித்து, இயற்கை வளங்களெல்லாம் நிரம்பிப்பொன் கொழிக்கும் பூமி

யாக விளங்கிய நமது பரத கண்டம், இப்பொழுது எல்லாத் தேசத்துச் சாமான்களும் விற்கும் சந்தையாகி விட்டது. ஒவ்வொரு தேசத்திற்கும் விவசாயமும், கைத்தொழிலும், வாணிபமுமே ஜீவநாடிகள். நமது நாடோ விவசாய நாடு. இந்தியாவில் முக்கால் பங்குக்கு மேலாக ஜனங்கள் விவசாயத்தை ஆதாரமாகக்கொண்டு, அதனையும் விருத்தியாக்காது, கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளையும் கவனியாது வருவதால், செல்வம் வறண்டு, நாடு வறுமையுற்று விட்டது. போதாக் குறைக்கு அடிமையில் ஆழ்ந்து கிடக்கும் நம் தேசத்தை அயல் நாட்டினர்கள் சுரண்டிக்கொண்டு போகிறார்கள். கைத்தொழில் படுத்து விட்டது; வாணிபம் இறந்து விட்டது; அயல் நாட்டார் ஆதிக்கம் அதிகமாகி விட்டது. நாட்டில் ஊக்கமில்லை; உற்சாகமில்லை; உறுதியில்லை; உழைப்பில்லை. அயர்லாண்டு தேச பக்தர் ஒருவர் கூறுகிறார் "கைத்தொழில் முயற்சியும், நமது ஊக்கத்தை வீணே போக்காமல் பயன் படுத்தும் துறைகளில் சாவதானமாய்த் தவறின்றிச் செலுத்தும் சாதனையும் உண்டானால், நமக்குத் தற்சமயத்தைக் காட்டிலும் நற் சமயம் முன் ஒரு பொழுதும் கிட்டவில்லை. எக்காரியத்திலும் அடுத்தடுத்து முயல்வதே எடுத்த காரியம் சித்தியாவதற்கு முக்கிய காரணமாம். வைராக்கிய சித்தாய்மாத்திரம் முயற்சி செய்துகொண்டு வருவோமானால், மற்ற தேசத்தாரைப்போலக் குறைவறச் சுகம் பெற்று வாழ்ந்து, சுயாதீனராகும் நிலைமை நமக்கு விரைவில் கிட்டும் என்று நம்புகிறேன்." ஆகவே நமது கேவலமான தற்கால நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்றுய்யுமாறு, தேசாபிவிருத்திக்குரிய வழிகளைப் போதித்து, கைத்தொழிலும், வியாபாரமும் சாதாரண ஜனங்களைச் சீமான்களாக்குமென்றும் ஏழைகள் பிழைக்க வழிகள் உண்டாக்கும் என்றும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்களுக்கு நூதன உற்சாகம் கொடுக்கவேண்டியது தேசாபிமானிகளின் கடமையாகும். இனிமேலாவது கைத்தொழிலபிவிருத்தியை நாடி, மூலதனம் சேகரித்து, கைத்தொழில்,



கூட்டு வியாபாரக் கம்பெனிகள் ஏற்படுத்தி, "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றபடி பல சீமைகளுக்குச் சென்று, நமது நாட்டுச் சரக்குகளை அயல் நாடுகளுக்கு அனுப்பி, ஒற்றுமை விரதம் பூண்டு, வீண் விவகாரங்களையும், பொதுக் காரியங்களில் ஜாதி, மதம், கட்சி முதலிய பேதங்களையும் ஒழித்து, தேசாபிமானம் பூண்டு தேசாபிவிருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக் கருதிப் பாடுபடவேண்டியது ஒவ்வொரு இந்தியனுடைய கடமையாகும். இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் உழைத்தால் தான் இந்திய நாடு பண்டைச் சிறப்படைந்து விளங்கும்.

அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கும் எத்தனையோ கம்பெனிக்காரர்கள் பெரிய இலாபங்கள் அடைந்துகொண்டிருக்க, நாம் கீழே போய்க்கொண்டிருக்கிறோம். மதுரையில் வைத்திருக்கும் ஹார்வி மில்லில் 100-க்கு 25 வீதம் லாபம் கொடுக்கிறார்கள். ஜல மின்சாரத்தால் ஓடும் பாபநாச மில்லிலும் தக்க லாபம் உண்டு. 50 வருஷங்களுக்கு முன்பு ரூ 25,000 மூலதனம் வைத்து, ஸ்தாபித்த ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி (Spencer & Co) ரூ 5,000,000 க்கு மேலாக விருத்தியாகியிருக்கிறது. கண்ணன்தேவன்மலை உற்பத்திக் கம்பெனியார்கள் (K. D. H. P. Co) சென்ற வருடத்தில் 100 க்கு 37½ லாபமும், இவ்வருடத்தில 100 க்கு 32 நிகரலாபமும், கூட்டுத் தேயிலைத்தோட்டக் கம்பெனியார்கள் (The Amalgamated Tea Estates Co) சென்ற வருடத்தில் 100 க்கு 35 லாபமும், இவ்வருஷத்தில் 100 க்கு 30 நிகரலாபமும், ஜேம்ஸ் பின்லே (James Finlay & Co) அண்டு கம்பெனிக்குச் சொந்தமான 4 தேயிலை எஸ்டேட் பங்குக்காரர்களுக்குச் சென்ற வருடத்தில் 100 க்கு 30 லாபமும், இவ்வருடத்தில் 100 க்கு 25 நிகர லாபமும் கொடுத்திருக்கிறார்கள். இவ்வுதாரணங்களை அடுக்கிக் கொண்டு போனால், விஷயம் வளர்ந்துகொண்டே போகும்.

சிலர் அதிகமாக ரூபாய் போட்டு வைத்திருந்த ஆர்பத்னெட் கம்பெனி முடிந்து விழுந்தது. தென்னிந்தியாவில் வயல்நாடு தங்கச்சுரங்கக் கம்பெனியில பங்கு சேர்ந்த பலர் நஷ்ட மடைந்தனர். இப்படிப்பட்ட ஏதோ சில அசம்பாவிதமான சம்பவங்களினால் கூட்டு வியாபாரங்களில் பலர் நம்பிக்கையை இழக்கிறார்கள். எக்காலத்திலும், எந்நாட்டிலும் சில அயோக்கியர்கள் இல்லாமல் இல்லை என்று சரித்திரம் கூறுகின்றது. இந்தியாவில் வர்த்தக விஷயத்தில் இன்னும் சரியானபடி நம்பிக்கை உண்டாகவில்லை. "சூடு கண்ட பூனை அடுப்பண்டை போகாது" என்ற முதுமொழி போல, நமமவர்கள் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு, இக் காரியத்தில் நெருங்குவதில்லை. "இரத்தின விலாசக் கம்பெனி"யை இன்னும் ஏல விவசாயிகள் மறந்திருக்கவே மாட்டார்கள். எல்லா நாடுகளிலும் இம் மாதிரியான சம்பவங்கள் பலவுண்டு. அறிஞர் கிளின் பார்லோ (Glyn Barlow) என்பவர் இந்தியக் கைத்தொழில் முயற்சி (Industrial India) என்ற புஸ்தகத்தில் அடியிற் கண்டவாறு எழுதுகிறார்.

"இந்திய வியாபாரமானது ஜாஸ்தியான அளவில் விருத்தியாக வேண்டுமானால், "ஏகோபித்த கூட்டு வியாபாரச் சங்க முறை" முதல் முதல் உற்பத்தியாகவேண்டும். இந்தியாவில் பிரத்தியேக வர்த்தகக் கூட்டமானது பெரிய முயற்சிகளில் பணம் செலவிடத் தகுந்த செல்வமுள்ளதாயிருக்கிறதில்லை. ஆகையால் பெரிய முயற்சிகளைச் செய்ய ஆரம்பிக்க வேண்டுமானால், தன்னுடைய பணத்தைக் கூட்டு வியாபார காரியங்களில் வட்டிக்கு விடும்படி இந்தியர்களுக்குக் கற்பிக்கவேண்டும். ஒதுக்குப்புறமாயிருக்கிற ஆயிரக்கணக்கான இந்திய கிராமங்களில் காரிய சித்தியாகும் தொழில் முயற்சிக்கு வேண்டிய சாதனங்கள் மறைந்து கிடக்கலாம். ஆனால் கிராம வாசி ஒருவருக்கும் தனியே ஒரு பெரிய முயற்சியில் பணம் செலவிடத் தகுந்த ஐவேஜாவது, தைரியமாவது இல்லாமையினால், அந்த முயற்சியும், அத்துடன் அதில் வரக்கூடிய இலாபமும் புதைந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அதற்கு வேண்டிய கை முதலைத் தங்களுக்குள்ளேயே பங்கு வீதமாகச் சேர்க்கவேண்டும். பிறகு ஒரு காரிய நிர்வாக சபையை நியமிக்கவேண்டும். அந்தச் சபையைக் கொண்டு அதற்கு ஒரு மானேஜரை ஏற்படுத்தவேண்டும். அது வர வர விருத்தி



யடையும்படி ஜாக்கிரதையாய்ப் பார்த்து வரவேண்டும். இலாபத்தை எதிர் பார்க்கும்படி கிராம வாசிகள் கற்றறிய வேண்டும். அதாவது தொழில் முயற்சி அபிவிருத்தியாக "ஏகோபித்த கூட்டு வியாபாரச் சங்கத்தை" ஏற்படுத்த அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதே."

நம் நாட்டில் பரவியிருக்கும் அவநம்பிக்கைத் தன்மையே கூட்டுத் தொழிலின்மைக்கு முக்கியமாயிருக்கிறது. நம்பிக்கையின்மை என்ற இந்தக் குணம் போனாலொழிய நம் தேசம் க்ஷேமமடையாது. கவனித்துப் பாருங்கள். மேன்மை அடைவோமென்ற நம்பிக்கையில்லாவிடில், ஒருவனுடைய வாழ்க்கை கஷ்டமாகவும், கனமாகவும், கசப்பாகவுமிருக்கும்.

ஏல விவசாயிகளில் அநேகர் சேர்ந்து, கோம்பையில் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி (T. C. P. A. Cardamom Sale Co.,) என்று ஒரு கூட்டு வியாபார ஸ்தாபனம் ஸ்தாபித்திருப்பதைக் கேட்டும், கண்டும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். லார்டு கர்ஸன் நாட்களிலே வங்காளப் பிரிவினைக் காலத்திலே ஓர் தேசிய உணர்ச்சி தோன்றி இமய முதல் குமரி வரை பரவிய வேகத்திலே, பற்பல ஸ்தாபனங்கள் உண்டானவைகளிலே நமது தமிழ் நாட்டிலே தூத்துக்குடியிலே சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியும் ஒன்றாகும். தெற்கே சென்ற வேகம் திருப்பியடித்ததிலே கோம்பையிலும் சுதேசி ஏலக் கிருஷிக் கம்பெனி ஒன்று தோன்றியது. இன்றும் இக் கம்பெனி புனர் ஜென்மம் எடுத்து, மற்றொரு பெயருடன் விளங்குகிறது. இக் கோம்பை நகர் பலவித இயக்கங்களுக்கும் ஆதாரமாயிருக்கிறது. இந்தியாவின் நாலு பக்கங்களுக்கும் நமது தலைவர்களில் பலர் ஏல விற்பனைக்காக யாத்திரை செய்ததின் பயனாக இக் கம்பெனி ஜெனித்திருக்கிறது என்று சொல்லுவது குற்றமாகாது. கம்பெனியின் நோக்கங்கள் விரிவாகவும், முன்னேற்றத்திற்குரிய பல வழிகளாகவும் காணப்படுகின்றன. இக் கம்பெனி திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் செல்வக் குழந்தையாகும். போடிநாயக்கனூர் ஜமீன்தாரும், நமது சங்

கத்தின் சாசுவத அக்ராசனாதிபதியுமாகிய மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் காம ராஜ பாண்டிய நாயக்கர் அவர்களும் நமது, சங்கத்தின் போஷகரும், செல்வச் சீமானும் ஆன மகா-ா-ா-ஸ்ரீ மகா கனம் ராவ் சாகிப் அழகண்ணன் செட்டியாரவர்களும் ஏல விவசாயிகளின் முன்னேற்றத்தைக் கவனிக்கும் பொழுது, ஏல விவசாயிகள் அடையப்போகிற நன்மைகளோ கணக்கற்றவை. அதற்கேற்றாற்போல் தலைமைச் சங்கத்தின் காரியதரிசியாக ஸ்ரீமான் பொன்னப்பன் செட்டியாரவர்களும், பொக்கிஷதாராக திருவாளர் கந்தஸ்வாமி செட்டியாரவர்களும் கிடைத்திருப்பது ஏல விவசாயிகள் அதிர்ஷ்ட வசமே.

ஸ்விட்ஜர்லாண்டு தேசத்தில் பால்காரர்கள் ஒற்றுமையுடன் கூடி ஏற்படுத்திய ஸ்தாபனத்தின் மூலம் பாலை நல்ல விலைக்கு விற்கிறார்கள். அமெரிக்காவில் எலுமிச்சைத் தோட்டக்காரர்கள் தங்கள் ஒற்றுமையினால் பழங்களையோ, சாரத்தையோ, (Essence) நல்ல விலைக்கு விற்கிறார்கள். காலையில் மலர்ந்து, மாலையில் வாடும் புஷ்பங்களை உண்டாக்கும் புஷ்பத் தோட்டக்காரர்களெல்லாம் சில நாடுகளில் ஒன்றுபட்டுத் தாங்கள் உற்பத்தி செய்யும் மலர்களையெல்லாம் இலாபகரமாக விற்பனை செய்கிறார்கள். இவை போன்ற உதாரணங்கள் பலவுண்டு. இனி ஒன்றுமட்டும் கூறிவிடுகிறேன். இந்தியர்களில் வியாபார அரசராக விளங்கும் டாடா கம்பெனியார் கேரளத்தில் கொச்சி சமஸ்தானத்தில் டாடா புரத்தில் தேங்காயிலிருந்து வெண்ணையெடுக்கும் தொழிற் சாலை ஏற்படுத்தி, விவசாயத்திற்கும், கைத்தொழிலுக்கும், வியாபாரத்திற்கும் உதவி செய்ததுமன்றி, அந்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதியை அதிகமாகக் குறைந்து விடும்படிசெய்து விட்டார்கள். நம் தேசத்தின் மூலப் பொருள்களெல்லாம் அயல் தேசங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து நமது இயற்கைப் பொருள்களெல்லாம் செயற்கைப் பொருள்களாக்கப்பட்டு மீண்டும் நம்மிடமே வருகின்றன. நம் தேசத்து மூலப் பொருள்கள் அயல் நாடுகளுக்குச் சென்று மாற்று ரூபங்களுடன் நம்



தேசங்களுக்கு வருமானால், அவைகளை நம்மைக்கொல்லவரும் பீரங்கிக்குண்டுகள் என்று நாம் கருதவேண்டும்.

முற்காலத்தில் ரோமர்களுடைய ஆடம்பரச்செலவுகளுக்காக ரோம் ராஜ்யத்திலிருந்து 1,000,000 பவுனுக்குக் (இக்கால இங்கிலீஷ் நாணயப்படி) குறைந்து இந்தியாவுக்குப் போகாத வருஷமே கிடையாதென்றும், ரோமும் அதைச்சேர்ந்த மற்ற மாகாணங்களிடமிருந்தும் வருடந்தோறும் 4,000,000 பவுன்கள் இந்தியாவுக்குச் சென்றன வென்றும் பிளினி என்பவர் கூறுகிறார். இவ்வாறு அவர் கூறுவதைப்பற்றி நாம் பெருமை பாராட்டிக்கொண்டபோதிலும், தற்காலத்தில் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சாமான்களை ஆண்டுதோறும் அயல் நாடுகளிலிருந்து இங்கு வரவழைப்பது கேவலம்! கேவலம்!! அயல் நாடுகளிலிருந்து அதிகமான இறக்குமதியால் நம் நாட்டின் செல்வமெல்லாம் கொள்ளை கொள்ளப்பட்டு அவைகள் அயல் நாடுகளுக்குக்கொண்டு போகப்படுகின்றன.

நமது நாட்டுக்கு வியாபார நிமித்தமாக அப்பொழுது வந்த ஈஸ்ட் இந்தியக் கம்பெனியார்கள் இப்பொழுது நம் நாட்டை ஆங்கில அரசாங்கம் என்ற மாறு பெயருடன் ஆண்டுகொண்டிருக்கிறார்கள். வியாபாரமே இப்பொழுது உலகத்தை ஆட்டிக்கொண்டிருக்கிறது. நம் விவசாயிகளாகக்கூடி, இம்மாதிரி பாங்காக அமைத்திருக்கும் கம்பெனி இதுவே தமிழ் நாட்டில் முதன்மையாயிருக்கிறது, பெரிதாயிருக்கிறது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இக் கம்பெனியின் மூலம் விவசாயிகள் வியாபாரம் செய்யப்பழகி விட்டார்கள் என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இக் கம்பெனியார் ஏலத்தை மட்டும் விற்க ஏற்பட்டவர்களல்லர். இவர்களுக்கு முன்னிலையில் ஏலக்காயைத் திராவகமாக்கும் வேலை நிற்கிறது; தூவலில் (தூவல் = ஏலமலையில் ஓர் நதியின் விழ்ச்சி) மின்சாரம் உண்டாக்கும் வேலை பின்னால் நிற்கிறது. இக் கம்பெனியார்கள் பம்பாய், டெல்லி, கான்பூர்,

காரச்சி, அமிர்தசரஸ், கல்க்த்தா முதலிய விடங்களிலும், இன்னும் எத்தனையோ விடங்களிலும் விற்பனை ஏஜண்டுகளையும், கமிஷன் ஏஜண்டுகளையும் ஏற்படுத்தித் தீவிரமாகத் தொழில் செய்வதை நான் நன்கு அறிவேன். இக்கம்பெனியார்கள் ஏலக் கிருஷிகர்களுக்கிடையில் வியாபார ஆசையை, கைத்தொழில் இச்சையை உண்டாக்கி, இப்பக்கத்து உற்சாகமுள்ள வாலிபர்களை இக்கம்பெனியைச்சேர்ந்த வேறு பலவகை வேலைகளில் ஈடுபட்டு உழைக்கும்படி செய்யவேண்டும். வடநாட்டிலிருக்கும் இக்கம்பெனியின் ஒவ்வொரு கடைக்கும் வேலைகள் கற்றுக்கொள்ளுமாறு ஏலக்குடியானவர்களின் மக்களில் உற்சாகமும், கல்வி அறிவும், பொது அறிவும் உடைய வாலிபர்களைப் பொறுக்கி எடுத்து அனுப்பவேண்டும். வாலிபர்களுக்கு மிக்க உற்சாகம் கொடுக்கவேண்டும். அயல் நாடுகளிலுள்ள லண்டன், பெர்லின், பாரீஸ், நியூ யார்க், டோக்கியோ முதலிய விடங்களுக்கும் இக்கம்பெனியின் பிரதிநிதிகள் இங்கிருந்து நியமிக்கப்பெற்று, அனுப்பப்படல் வேண்டும். பிரசாரம் செய்வதற்குச் செல்லும் செலவைச் சற்றும் கவனிக்கக்கூடாது. அறிவாளிகளுடைய உதவியைப்பெறச் சற்றும் தயங்கக்கூடாது. இப்பக்கத்து ஏல விவசாயிகளுக்கு இக்கம்பெனியில் நம்பிக்கை உண்டாகுமாறு செய்யவேண்டும். எல்லா ஏல விவசாயிகளுடைய மனதையும் கவர்ந்து, அவர்கள் அனைவரையும் பங்கெடுத்துக்கொள்ளுமாறு செய்யவேண்டும். தமிழ் நாட்டிலும், திருவாங்கூர் சமஸ்தானத்திலும், ஏல விவசாய உலகத்திலும் இது ஒரு உதாரணக் கம்பெனி (Model Company) யாக விளங்கவேண்டும். கம்பெனியின் டைரெக்டர்கள் நல்ல உழைப்பு உழைக்கிறார்கள். அஞ்சா நெஞ்சத்துடனும், அசையா உறுதியுடனும் இவர்கள் கம்பெனி விஷயத்தில் வேலை செய்வதைக்கண்டு ஏல விவசாயிகளில் ஆச்சரியம் அடையாதவர்கள், ஆனந்தம் அடையாதவர்கள் இல்லையென்றே கூறலாம். இவர்கள் இத்துடன் இருந்துவிடாது, இன்னும் மென்மேலும் வேலை செய்வார்களானால், இக்கம்பெனி மகா உயர்வடைந்து விளங்கும்.



டாடா, சாசூன், பொமான்ஜி, வாச்சா, [illegible], பெட்டிட், பஜாஜ் முதலிய இன்னும் எத்தனையோ [illegible] பம்பாய் மாகாணத்தில வியாபாரத்தில் சிறந்து விளங்குவதாய்க் கேள்விப்படுகிறோம். ஆனால் தென்னாட்டில் அவ்விதமில்லை. வட நாட்டவர்கள் தென்னாட்டிற்குப் பலர் முக்கிய வியாபார நிமித்தமாகவந்து குடியேறித் தத்தம் தொழில்களை உற்சாகத்துடன் நடத்துகிறார்கள். தமிழ் நாட்டில் பெரிய பட்டினங்களில் வட நாட்டார்கள் இல்லாத பட்டினங்களை கிடையாது. தமிழர்களில் பலர் வடநாட்டிற்குச்சொற்ப சம்பளம் பெறும்பொருட்டே செல்கின்றனர். அவ்வாறு சென்ற தமிழர்களில் கல்கத்தாவில ஆண்ட்ரு யூல் அண்டு கம்பெனி (Andrew Yule and Co.,) யுடன் கூட்டாகக்கூடிச் செல்வ முற்றுப் பின்பு கன்னிவாடி ஜமீனை வாங்கிய N. R. அய்யரையும், சுய முயற்சியினால் மேன்மையடைந்து கல்கத்தாவில் பிரபலமாக இப்பொழுது கம்பெனி வைத்து நடத்தும் வானமாமலை N. S. T. சாரி அண்டு கம்பெனியையும், காசியில் பிரபலமாகப் பட்டு வியாபாரம் செய்யும் திருநெல்வேலிஜில்லா, களக்காடு K. S. முத்தையா அண்டு கம்பெனியையும் தமிழ் நாடு ஒருவாறு அறியும். ஜெர்மனியில் கோட்டின்ஜன் (Gottingen) என்னும் நகரத்தில் வியாபாரம் நடத்தும் A. R. பிள்ளை அண்டு கம்பெனியை திருவாங்கூர் வாசிகள் அதிகமாக அறிவார்கள். லண்டனில் வீராச்சாமி என்பவர் சாப்பாட்டு விடுதி ஒன்றை வைத்து நடத்திவருகிறார். இவைபோன்ற உதாரணங்கள் இன்னும் பல இல்லாமலில்லை.

| | | |
|---|---|---|
| ஸ்ரீமான் | T. R. திருமலைசுப்பு செட்டியார் | அவர்கள் |
| ,, | தே. தொட்டண கவண்டர் | ,, |
| ,, | உ. ம. சே. முகைய்தீன்பிள்ளை ராவுத்தர் | ,, |
| ,, | த. அ. கு. அழகர் ராஜா | ,, |
| ,, | சி. ராமலிங்கம் செட்டியார் | ,, |
| ,, | சி. சங்கரலிங்கம்பிள்ளை | ,, |
| ,, | வ. சீ. ராமலிங்கம் செட்டியார் | ,, |
| ,, | அ. செ. கி. செங்கல்வாமி நாயக்கர் | ,, |

ஆகிய இந்த எட்டுக் கனவான்களும் இக்கம்பெனிக்கு டைரெக்டர்களாக இருக்கிறார்கள். இந்த எட்டு டைரெக்டர்களும் இந்தக் கம்பெனிக்கு அஷ்டதிக்குப் பாலகர்கள் மாதிரியாக இருக்கிறார்கள். செல்வச் சிறப்பாலும், செல்வாக்குப் பெருக்காலும், நாணயப் பெருமையாலும், ஆற்றலின் பெருமிதத்தாலும் சிறப்புற்றிருக்கும் இவர்களை ஏல விவசாயிகள் நன்கு அறிவார்களாகையால், இவர்களில் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை. ஊக்கமும், காரியத்தில் கண்ணும் கொண்ட இக் கனவான்கள் இக் கம்பெனி விஷயத்தில் நன்கு பாடுபட வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. வியாபாரத் துறையிலும், கைத்தொழில் துறையிலும் முற்பட்ட இக்கம்பெனி எல்லா வழிகளிலும் ஜெயம் பெற்று, செல்வம் பெற்று, செல்வாக்குப் பெற்று, ஓங்கி, வளர்ந்து என்றும் நிலைத்து நின்று, ஏல விவசாயிகளுக்கு அநேக நன்மைகள் அளிக்குமாறு முழு முதல் நாயகனைப் பிரார்த்திக்கிறேன். அவனும் அவ்வாறே அருளட்டும்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

---

# புரூக் பாண்டுக் கம்பெனியின் முடிவு.

புரூக் பாண்டுக் கம்பெனியார் தேயிலைக் கிருஷிக்காகத் திருவாங்கூர்ச் சமஸ்தானத்தில் அநேக ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டுமென்று விண்ணப்பித்தவுடன், சுதேசிகளைப் பற்றியாவது, தேசத்தின் வருங்கால நிலையைப் பற்றியாவது, பொருளாதார அபிவிருத்தியைப் பற்றியாவது, சிறிதளவும் சிந்தியாது, அயல் நாட்-



டினர்களால் நம் தேசம் அடைந்திருக்கும் அதோகதியை அறியாது, தப்பித்தவறிச் சற்றுச் சுதந்திரத்துடன் இருக்கும் சுதேச சமஸ்தானங்களில் ஒன்றாகிய இதில் அன்னியர்கள் ஆதிக்கத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று செய்த சிலருடைய சூழ்ச்சியால் "மாற்றானுக்கு இடங்கொடேல்" என்னும் அருமைத் திருவாசகத்தைக் கடுகளவேனும் கவனியாது, திருவாங்கூர் சர்க்கார் குருட்டுத்தனமாக இக்கம்பெனிக்கு அவசரத்துடன் நிலம் பதிப்பித்துக்கொடுக்க ஓடிவந்தது அநியாயம்! அநியாயம்!! அதிக அநியாயம்!!! எத்தனையோ முறை விண்ணப்பித்தும், எவ்வளவோ கெஞ்சியும், கணக்கற்ற ஏழைச் சுதேசிகள் ஒருவருக்கேனும் ஒரு ஏக்கர் பூமியைக்கூடப் பதித்துக்கொடுக்க முன் வராது, தன்னாட்டினர்கள் விஷயத்தில் வன்னெஞ்சத்துடன் பல்லை இறுக்கக் கடித்துக்கொண்டிருக்கும் அரசாங்கம் இப்பொழுது 1,80,000 ஏக்கர் நிலத்தை அயல் நாட்டுக் கம்பெனியார்களுக்குச் சற்றும் தயங்காமல் அனுமதிக்க முன் வந்ததைக் கண்டவுடன், திருவாங்கூர் வாசிகள் இது என்ன? என்று திகைத்து விட்டார்கள். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்திற்குச் சற்றும் உதவிசெய்யாது, அயலார்களுக்கே ஒத்தாசைசெய்து கொண்டிருந்தால், அவன் குடும்பத்தார்கள் அவனை "ஊராருக்கு மணத்த தாழம்பூ" வென்று ஒரு பழமொழி கூறி ஏசுவது, நம் தமிழ் நாட்டின் வழக்கம். "ஊராருக்கு மணத்த தாழம்பூ" வாக இருக்கும் திருவாங்கூர் ராஜ்யம் என்று திருவாங்கூர் வாசிகள் ஒருக்காலும் எண்ணவே கிடையாது. "தரும ராஜ்யம்" என்ற பட்டப்பெயர் பெற்ற திருவாங்கூரின் உத்தம, உன்னதப்பெயர் பல வழிகளில் இப்பொழுது மங்கிக்கொண்டு வருகிறது. அங்கு அன்னியர் ஆட்சி ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது.

அரசாங்கத்தின் அட்டூழியத்தை அடக்கப் பொது ஜனங்கள் செய்த கிளர்ச்சிகளாலும், தேசத் தலைவர்கள் செய்த அரும்பெரும் வேலைகளினாலும், சுதேசாபிமானமிக்க பத்திரிகை போட்ட ஓயாக் கூக்குரல்களினாலும், சட்ட சபையில் நாட்டுப்பற்றுடைய உண்மை

அங்கத்தினர்கள் விடாது உறுதியுடன் செய்த வாதங்களினாலும், போராட்டங்களினாலும், தேசமே எழும்பி நின்று நாலு பக்கங்களிலும் பல கூட்டங்கள் கூடிச்செய்த கண்டனத்தீர்மானங்களினாலும் அரசாங்கமே அசைந்து, ஆடி, அதைரியம் அடைந்து, திண்டாடித், திகைத்து விட்டது. பின்பு தான் புரூக் பாண்டுக் கம்பெனியின் விஷயத்தைப்பற்றித் திருவாங்கூர் சர்க்கார் தீர்க்காலோசனை செய்தார்கள்.

உலகத்தில் இன்ப சக்தி, துன்ப சக்தி என இரு சக்திகள் உண்டு. இவை இரண்டும் வெவ்வேறு விதமாக வேலைகள் செய்த போதிலும், இரண்டுக்கும் அதிக ஆற்றல் உண்டு. பொதுஜனங்களிடமிருந்து உண்மையுடன், ஆவேசத்துடன் எழும்பிய, ஏகோபித்த இச்சக்தியானது சர்க்காரின்மீது சரியாய்த் தாக்கியபடியால், புரூக் பாண்டுக் கம்பெனி விஷயத்தில் அரசாங்கமே அதிகமாகத் தளர்ந்து விட்டது. இது பத்மநாப ராஜ்யமாகையால், அவனருளும் திருவாங்கூர் வாசிகளுக்கு அனுகூலமாகவே இருந்திருக்க வேண்டுமென்று எண்ணத்தான் வேண்டியிருக்கிறது

புரூக் பாண்டுக் கம்பெனியார் கனம் திவான் அவர்களுக்கு அறிவித்த விஷயத்தை அறிவது வாசகர்களுக்கு அதிக இரசமாகவேயிருக்கும். புரூக் பாண்டுக் கம்பெனியின் தோட்டக்கார நிபுணர் பெரியாற்றுக்குத் தெற்கேயுள்ள காடுகளைப் பார்வையிட்டதில், பொதுவாகத் தேயிலைக் கிருஷிக்கு ஏற்றதாயிருப்பினும், அவர்கள் விரும்புகிறபடி மேட்டுப்பாங்கான இடங்கள் இல்லாமையாலும், அவ்விடங்களுக்குத் தக்கபடி ரோட்டு வசதிகள் உண்டாக்குவது மிக்க கஷ்டமாயிருக்கிறபடியாலும், ரோட்டு வசதிகள் செய்தாலும், ஆரோக்கிய மற்ற இடங்களாயிருப்பதாலும், சுதேச ஜனங்களும், சுதேசப் பத்திரிகைகளும் கிளர்ச்சி செய்வதாலும், தங்களுக்குத் திருவாங்கூரில் நிலம் தேவையில்லையென்றும், கனம் திவானவர்கள் அவர்களுக்குச்செய்த ஊழியத்தையும், உபகாரத்தையும் அதிகமாகப் பாராட்டுவதாகவும் தெரி



வித்துவிட்டார்கள். சர்க்காரே கொடுக்க முடியாது என்று சொல்லப்போகும் தறுவாயில் அவர்களே கனம் திவான் மூலம் விஷயத்தைத்தெரிந்து, தங்களுக்கு நிலம் வேண்டாம் என்று அறிவித்துவிட்டார்கள். புரூக் பாண்டுக் கம்பெனி இவ்வாறு புரோக் பாண்டுக்கம்பெனியாகி விட்டது. ஐயோ! கனம் திவானவர்கள் இவ்விஷயத்தில் செய்த பகீரதப் பிரயத்தனங்களெல்லாம் பாழாயினவே. அவர் ஒன்று நினைக்க, கடவுள் ஒன்று நினைத்துவிட்டார். பரிதாபம்! அவருக்கு இக்காரியம் இப்படியாகிவிட்டபடியால் நெஞ்சமுடைந்து புண்பட்டிருக்கும். அதைக் கடவுள் தான் ஆற்றவேண்டும். கனம் திவானவர்கள் இதில் நல்ல வேலை செய்தார்! மெச்சத்தக்கது!! அக்கம்பெனிக்காரர்கள் தான் அவருக்குத்தோடா ஒன்று பரிசாக அளிக்கவேண்டும். இதை ஆழ்ந்து, கவனிக்கக், கவனிக்கத், "திராட்சைப்பழம் புளிக்கும்" என்று ஏமாந்த பின் கூறிய நரிக்கதையின் ஞாபகம் வருகிறது. இப்படித்தான் அயல் நாட்டினர்களின் தந்திரங்கள் இருக்குமோவென்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

திருவாங்கூர் மலைப்பிராந்தியங்களில் கண்ணன் தேவன்மலை, மத்திய திருவாங்கூர், முண்டகாயம், வடக்குத் திருவாங்கூர், தெற்குத் திருவாங்கூர் ஆகிய ஐரோப்பியத் தோட்டக்காரச் சங்கங்களும், இன்னும் சில அயல் நாட்டுக் கம்பெனிகளும் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏக்கர்க் காடுகளை, எத்தனையோ எஸ்டேட்டுகளாகப் பிரித்துத் தேயிலையும், ரப்பரும் கிருஷிசெய்து, மகாலாபம் அடைந்து கொண்டிருக்கின்றனவென்று புரூக் பாண்டுக் கம்பெனிக்காரர்களுக்கு நன்கு தெரியும். இவ்வாறு தெரிந்திருந்தும், திருவாங்கூர் மலை தேயிலைப்பயிர் செய்வதற்கு அவ்வளவு நல்ல பூமியல்ல என்று அவர்கள் சொல்வது எவருக்குத்தான் ஆச்சர்யமாக விராது? இது எவ்விதத்திலும் உண்மையன்று.

தென்னை, கமுகு, பலா, மா, விதம் விதமான வாழைகள், மிளகு, வெற்றிலை, மரச்சீனி, சேனை, காய்ச்சில் முதலிய மரஞ்,

செடி, கொடி, கிழங்கு வகைகளாலும், அவைகளின் வளர்ச்சியாலும், செழிமையாலும், அடர்த்தியாலும், அவைகளின் பசியற்ற, அனந்த முகங்கள் போன்ற பச்சைப் பசேலென்ற இலைகளாலும், அநேக அருமையான இயற்கை அழகுகளாலும், விநோதங்களாலும், அவைகளின் மாட்சியோடும், அவ்விளைதக் காட்சியோடும் கலந்து, களித்து வாழும் கட்டழகியர்களாலும், காளையர்களாலும் அலங்கரிக்கப்பட்ட கேரள நன்னாடு, பாணினி முனிவரால் தரிசிக்கப்பெற்ற பண்டைத் தேசம், கொலம்பஸ் என்பவரைத் தனது உயர்ந்த வாசனைத் திரவியங்களினால் வசீகரித்து, இந்தியாவிற்கே வரும்படிசெய்து, வரும் வழியில் திசை தெரியாது தற்செயலாய்ப் புதிய உலகமாகிய அமெரிக்காவைக் கண்டுபிடிக்கும்படிசெய்த மலையாளம், பரசுராமரால் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யம், நீர்வளம், நிலவளம், மலைவளம் வாய்ந்து, காஷ்மீரத்திற்கு நிகரான சமஸ்தானம், இந்தியாவிலே தேயிலைக் கிருஷியிலே பெயர் பெற்று விளங்கும் அஸ்ஸாம் தேசத்திற்கு அடுத்தபடியாக நிற்கும் சேரநாடாம் திருவாங்கூர் ஏமாறிய புரூக் பாண்டுக் கம்பெனியாரால் இப்பொழுது திருவாங்கூர் தேயிலைக் கிருஷிக்கு அதிகலாயக்கற்ற இடம் என்று சொல்லப்பட்டது சுத்த மூடத்தனமாகும், கண்மூடித்தனமாகும். எப்படியேனும் இத்தொந்திரவு தீர்ந்ததென்று குடிகள் சந்தோஷமாயிருக்கிறார்கள். கிளர்ச்சிக்காரர்கள் வந்தனமளிக்கப்படுவார்களாக.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.



# கூட்டு வியாபாரம்.

“உத்தியோகம் புருஷலக்ஷணம்” என்ற முதுரைக்கிணங்க, ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபடுவது இன்றியமையாததே. தொழிலில் ஈடுபடுவது புருஷலக்ஷணமென்பதற்கன்று. பொருள் தேடும் நன்னோக்கத்திற்கே யாகும். அருளில்லார்க்கு அவ்வுலகம் எவ்வாறில்லையோ, அவ்வாறே பொருளில்லார்க்கும் இவ்வுலகமில்லை என்பதைப் பலர் தம் தம் அனுபவத்தால் அறிந்திருக்கலாமாதலால், பொருள் தனைப் போற்றாதாரில்லை. கோட்டி முதல் தொண்டமான் வரையிலுள்ள ஒவ்வொருவருக்கும் தம் வாழ்க்கையை நடத்தவோ, ஏனைய பொதுக் காரியங்கள் புரியவோ பொருள் வேண்டியதாகவேயிருக்கிறது.

இத்தகைய பொருளைப் பெறுவதெப்படி? தொழில்களை மேற்கொள்வதால் அடையலாம். உலகத்தில் எத்தனையோ விதத் தொழில்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றுள் விவசாயத்தையும், கைத்தொழிலையுமே எல்லோரும் சிறப்பாகக் கருதுகிறார்கள். இவைகளுக்குப் பின் ஏற்படும் தொழில் வியாபாரமேயாகும். தொழிலாளர்களும், விவசாயிகளும் பாடுபட்டு உண்டாக்கும் பல வித பொருள்களை உலகத்தில் மற்ற மக்களுக்கு உபயோகமாகும்படிசெய்வது வியாபாரமே யாகும். நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கும், மக்கள் முன்னேற்றத்திற்கும் வாணிபம் ஒரு முக்கிய காரணமாகும். சுருக்கமாகக் கூறின் இந்நாளில் உலகத்தையே ஆட்டிவைப்பதும், ஆண்டு வருவதும் வாணிபமே யாகும்.

ஆனால் வியாபாரத்திற்கு நம் நாட்டில் ஒருவித தோஷத்தைக் கற்பித்துவிட்டார்கள். அதற்குக்காரணம் வாணிபத்தை ஏற்றுக்கொண்ட நம் சகோதரர்களே யாவர். “வியாபாரம் அநேக சிக்

தனை" என்றும், "வர்த்தகம் வஞ்சகமான" தென்றும் சிலர் எளிதில் கூறிவிடுகிறார்கள். அதமத்திலும் அதம்மாகிய சேவகாபிவிருத்தியிலிருக்கும் உத்தியோகம் செய்பவர்களும் தங்கள் தொழிலின் இழிவைச் சிறிதும் உணராது வியாபாரத்தின் பேரில் பழி கூறவும், கேவலப்படுத்தவும் வந்துவிட்டார்கள். வியாபாரத்தில் பரோபகார சிந்தை நிறைந்திருப்பதையும், மக்களின் சகலவித எண்ணங்களையும் பூர்த்தி செய்விப்பதுடன், அவர்களுடைய முன்னேற்றத்திற்கும் முக்கிய காரணமாயிருப்பதையும், இச்சேவகாபிவிருத்திகள் உணராதிருப்பது விசனிக்கத்தக்கதே.

கொள்வதும், கொடுப்பதுமாயிருப்பதே வியாபாரமாகும். அயல் நாடுகளின் வியாபாரத்தை ஏற்றுமதி, இறக்குமதி எனலாம். வியாபாரத்திற்கு நாணயம், நம்பிக்கை, ஒற்றுமை, தைரியம் முதலியவைகள் முக்கியமான அஸ்திவாரமாகும். இவற்றுள் எது குறையினும் நாளடைவில் வியாபாரம் குன்றிவிடும் என்பதற்கு ஐயமில்லை. நம் நாட்டில் நடைபெற்றுவரும் சகல வியாபாரங்களும் இரண்டு பிரிவுகளில் அடங்கிவிடுகின்றன. நம் நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வியாபாரம் ஒன்று, நமக்கு வேண்டியவைகளை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் வியாபாரம் ஒன்று. ஏற்றுமதி வியாபாரமோ வியாபாரத்துறையிலிருப்பவர்களுடன், நாட்டிலுள்ள எல்லாவிதத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் சம்பந்தப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. ஆனால் இறக்குமதி வியாபாரம் வியாபாரிகளையும், நகரப்புறமிருக்கும் சிறு பான்மையான மக்களையும் சம்பந்தப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. வியாபாரத்தின் இரண்டு பிரிவுகளும் பொதுவாக வியாபாரிகளேயன்றி, விவசாயிகளையும், கைத்தொழிலாளர்களையும் பாதிக்கக் கூடியதாயிருக்கும்போது, வியாபாரிகள் மட்டும் அதைமேற் கொண்டால் அது மற்றபிரிவினர்களுக்கும் எவ்வாறு நற்பயனளிக்க முடியும்?

நம் நாட்டு வியாபாரம் வியாபாரிகளாகிய ஒரு பிரிவினர்கள் வசம் மாத்திரம் அடங்கியிருப்பதால், அதன் நிலைமை எவ்வாறுள்ள



தென்பதை ஆராய்வோம். ஒரு பிரிவினர்களாகிய வியாபாரிகளிடமேனும் வியாபாரம் ஐக்கிய பாவனையில் நடந்துவருகிறதா? அந்தோ மோசம்! கூட்டுமுறையின்றி வியாபாரங்கள் தனித்த நிலைமையில் நடைபெறுவதால், நடத்துபவர்களுக்கேனும், மற்றவர்களுக்கேனும் பயனில்லாதிருக்கிறது. நம் வியாபாரிகளுள் வியாபாரத்தின் அஸ்திவாரங்களாகிய நாணயம், நம்பிக்கை, ஒற்றுமை, தைரியமின்மைபோன்ற குறைகளால் வியாபாரத்திற்கே இழிவு வந்துவிட்டது. உதாரணமாக, நம் வியாபாரிகள் வியாபாரத்தை மிகவும் இரகசியமாய் நடத்துகிறார்கள். வியாபார விஷயமாய் வெளியூர்களுக்குப்போக வேண்டுமானால், நடுநிசியிலேதான் போகிறார்கள். தங்களுக்கு வரும் தபால்களை மிகவும் இரகசியமாய் வைத்திருக்கிறார்கள். இவர்களுடைய நோக்கமெல்லாம் வியாபார அபிவிருத்தியிலும், நூதன முறைகளிலும் இல்லை. ஒருவர் ஒரு எண்ணைக்கடை வைத்தால், பலரும் எண்ணைக்கடையே வைத்து முடிவில் எல்லோரும் ஈயோட்டுவார்கள். ஒருவர் ஒரு துறையிலிருந்து ஒரு சரக்கைத் தருவித்தால், மற்றவர்களும் அவ்விடமே சென்று, அத்துறையில் கிராக்கியாக்கித் தன் ஊரிலும் போட்டியின்பேரில் சௌதப்படுத்தி விடுகிறார்கள். ஒருவருடன் ஒருவர் போட்டி போடுவதால், விலையைக் குறைக்கநேரிடுகிறது. விலையைக் குறைத்தால், அதைச் சரிப்படுத்த வேறு வஞ்சகங்கள் செய்ய முயலுகிறார்கள். முடிவில் வியாபாரம் வஞ்சகமாய் விடுகிறது. கை முதலுள்ளவர்கள் தான் வியாபாரம் செய்ய முடியுமென்ற எண்ணம் இப்போது மாறிவிட்டது. கடன் வாங்கிக் கடன் கொடுக்க மார்வாடிகள் மலிந்துவிட்டதால் எவரும் வியாபாரத்தை நடத்த முன் வருகிறார்கள். இத்தகைய புள்ளிகளால் தான் வியாபாரக்கட்டுப்பாடு, நாணயம் குலைந்து விட்டன. மற்ற வியாபாரிகளுடன் கட்டுப்பாடாக இருக்க இவர்களுக்கு வசதியில்லை. கடன்காரன் தவணைகள் தலைமேல் காத்துக்கொண்டிருக்கின்றன. இரண்டு நாள் தாமதித்து விற்பதோ, வாங்குவதோ செய்வோமென்றால், அதனால் வரும் இலாபம் வட்டிக்குச் சரியா

கவோ, குறைந்தோ போய் விடுவதனால், அவர்கள் எதையும் நிதானித்து நடத்தமுடியாதவர்களாயிருக்கிறார்கள். இதனால் சொந்த முதல் போட்டு நடத்தும் வியாபாரிகளுடைய வியாபாரம் அதிகமாய்ப் பாதிக்கப்படுகிறது. ஆகவே யாரும் ஒழுங்காக நடத்த முடியாமற் போய்விடுகிறது. நிர்வாணிகள் ஊரில் கோவணங் கட்டியவன் பைத்தியகாரன் அன்றோ? வியாபாரிகளின் நிலைமை தான் இவ்வாறென்றால், இவர்களுக்கு அடுத்தபடியாக சம்பந்தப்பட்டிருக்கும் விவசாயிகள் நிலைமையையும் சற்று ஆராய்வோம்.

விவசாயிகள் படாதபாடுபட்டுச் சேகரித்த பொருளை விற்பனை செய்யும் பொருட்டுச் சமீபத்திலுள்ள தரகு வியாபாரிகளிடம் கொண்டுபோகிறார்கள். இத் தரகு வியாபாரத்திலும் போட்டிகள் இருப்பதால், கிராமக் குடியானவர்களைக் குறைந்த தரகு என்ற ஆசை காட்டி ஒவ்வொரு தரகு வியாபாரியும் தம்தம்மிடம் இழுக்க ஆரம்பிக்கிறான். தரகில் 0-8-0 குறைத்தால், மற்ற சூதால் 2-0-0 ரூபாய் அவனிடம் சம்பாதித்து விடுவார்கள். உதாரணமாக, கடலைக்காயோ, பஞ்சோ,' ஏலமோ, மற்ற எந்தப் பொருளையோ எடுத்துக்கொள்ளுங்கள், குடியானவன் அரும்பாடுபட்டு உண்டாக்கி, அதைத் தக்க விலைக்குச் செலவழிக்கவும் அரும்பாடு படவேண்டியிருக்கிறது. இத்தகைய பொருள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதால், வெளிநாட்டு வியாபாரிகள் ஆங்காங்கு வந்து குவிந்திருக்கிறார்கள். ஆனால் விலையும், மற்ற வியாபாரங்களும் அயல் நாட்டார் சௌகர்யப்படியே நடைபெற்று வருகின்றன. அவன் வைத்தது தான் விலை. அவன் பார்த்து வியாபாரத்தைக் கிராக்கியும் ஆக்கிவிடுகிறான்; சௌதமும் ஆக்கிவிடுகிறான். நமது தரகு வியாபாரிகளும் அவர்களுக்குத்தான் ஒத்தாசையாயிருக்கிறார்களே ஒழிய, நம் குடியானவர்களுக்கில்லை. நம்மிடம் 10 ரூபாய்க்கு வாங்கும் கடலையையோ, பருத்தியையோ தன் நாட்டிற்கு அனுப்பி அதனால் 100 ரூபாய் அவன் சம்பாதிப்பதால், நம் நாட்டுச் சரக்குகளைத் தான் வெளிநாட்டு வியாபாரிகள் ஆதாரமாகவும், உயிராகவும் மதித்து வருகிறார்கள். நாம் சொன்ன விலைக்கும், நம் சௌகரியத்திற்கும் அவர்கள் எப்படியும் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால் நமது வியாபாரிகளின் நிலைமையால் வெளிநாட்டார்கள் நம்மை ஆட்டிவைக்கிறார்கள். நம் விவசாயிகள் அதினால் அதிக நஷ்டமடைகிறார்கள்.



இந்த நஷ்டத்தையும், கஷ்டத்தையும் எவ்வாறு போக்குவது? இந்தப் பொறுப்பு யாருடையது? இதை எப்படிப் போக்குவது? இதற்கு வியாபாரிகள் தான் பொறுப்பாளிகள் எனச் சிலர் கூறலாம். வியாபாரிகளைக் காட்டிலும் விவசாயிகளுக்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது இத்தகைய தனித்த வியாபாரங்களில் கூட்டு வியாபாரங்கள் இல்லாததால் வியாபாரியைவிட விவசாயிகள் படும் நஷ்டம் தான் பெரியது. இக் குறையினால் தான் நம் விவசாயமும் குன்றி வருகிறது. கஷ்டத்துக்குத் தக்க இலாபமிருந்தாலன்றோ விவசாயமும் முன்னடையும். நம் விவசாயிகள் கஷ்டப்படுவது காட்டில் கிடைத்ததை, தரகனுக்கும், வட்டிக்கும், வக்கீலுக்கும், கந்தாயத்துக்குமாய்க் கொடுத்துவிட்டு அடுத்த மகசூல் வரையில் மற்றவர்களுடைய கைப் பணத்திற்கும், தயவிற்கும் எதிர்பார்க்கிறார்கள். எப்போதும் கடனாளிதான். இதனால் தான் இக்காலத்தில் "உழுகிறவனுக்கு உழக்குக்கூட மிஞ்சாது" என்ற வசைச் சொல்லும் விவசாயத்திற்கு வந்து விட்டது. இதை எப்படிப் போக்குவது? விவசாயிகள் தக்கலாபம் பெற்று முன்னுக்கு, வருவதெப்படி? தொடக்கத்தில் கூறியபடிக் கூட்டு வியாபார முறைகளை விவசாயிகளும், வியாபாரிகளும் தொடங்கி நடத்திவந்தால், விவசாயிகளின் துன்பங்கள் தீர்வது நிச்சயம்.

கூட்டு வியாபாரமாவது யாது? இருவர்,மூவர் சேர்ந்து செய்யும் வியாபாரமா? இல்லை. ஒரு மாகாணம், ஜில்லா அல்லது ஒரு தனிப் பொருள்—பஞ்சு, கடலை முதலிய விளையும் மாகாணங்களில் (Cotton areas என்றதைப்போன்ற இடங்கள்) உள்ள விவசாயிகளும், வியாபாரிகளும் சேர்ந்து நடத்தும் வியாபாரத்திற்குத் தான் கூட்டு வியாபாரம் எனலாம். இந்த வியாபாரத்திற்கு வேண்

டிய முதலீடுகளுக்காகப் பங்குகள் (Shares) ஏற்படுத்திவிட்டால், எல்லா விவசாயிகளும், வியாபாரிகளும் பணக்காரன், ஏழை என்ற வித்தியாசமின்றி அதில் ஈடுபட்டு, அவரவர்கள் எடுத்துக்கொண்ட பங்குத்தொகைகளை அனுசரித்துத் தக்க இலாபத்தை அடையலாம். இதனால் பலர் வியாபாரம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற அவசியமும் இல்லாமற்போகும். பெருத்த பணக்காரர்களுக்குத் தக்க வருப்படியும் ஏற்படும். வியாபாரத்தில் போட்டியே வாராது. வந்தாலும் தலை எடுக்காது. அடல் நாட்டு வியாபாரிகள் ஏற்றுமதிச் சரக்குகளை நாம் சொன்ன விலையில் வாங்கித்தான் ஆகவேண்டும். இதனால் நம் விவசாயமும் ஓங்கி வளரும். ஏற்றுமதி வியாபாரங்களில் அயல் நாட்டு வியாபாரிகளின் தயவிற்கு இப்போது திண்டாடும் நிர்ப்பந்தமும் நீங்கிவிடும் விவசாயிகளும், தங்களுடைய சரக்குகளுக்கு அதிகச்செலவின்றித் தக்க விலையைப் பெறமுடியும்.

இத்தகைய கூட்டு வியாபாரக் கம்பெனிகள் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பணம் உதவலாம், அல்லது விவசாயிகள் தங்கள் பொருள்களை இத்தகைய ஸ்தாபனங்களில் வைத்து நம்பிக்கையாக முக்கால் பங்கு பணம் பெற்றுக்கொண்டு, தக்க விலையில் தம் பொருள்களை விலையாக்கிக்கொள்ளலாம். இத்தகைய ஐக்கிய கூட்டு வியாபாரங்களை நடத்தப் பங்குக்காரர்களிடத்தில் நம்பிக்கையும், தேச பக்தியும், நாணயமும், ஒற்றுமையும் இருக்கவேண்டும். இத்தகைய ஸ்தாபனங்கள் நடத்துவது அசாத்தியமன்று. அமெரிக்காவில் பல ஸ்தாபனங்கள் இதைப்போல் நடைபெற்று வருகின்றன. இதனால் குடிசைத்தொழில் கெட்டுப்போகுமென்று சிலர் பிதற்றலாம். அது பிசகு. ஒரு நெசவுகாரனோ, தொழிலாளியோ தான் ஒரு நாள் இரண்டு நாள் கஷ்டப்பட்டுச் செய்த சாமான்களைத் தக்க விலைக்கு விற்க, நம் நாட்டில் இரண்டு நாள் திரியவேண்டியிருக்கிறது, அல்லது உடனே விலையாகவேண்டுமானால், தரகர்களிடம் சென்று, தன் இலாபத்தில் பாதியை இழக்கவேண்டி வருகிறது. ஆனால் இத்தகைய கூட்டு வியாபாரம் முறைகள் ஸ்தாபனம் பெற்று, அதில் பங்காளிகளாயிருக்கும் தொழி



லாளர்களுக்கும், நெசவுகாரர்களுக்கும் இதில் அத்துன்பமில்லை. தான் செய்த பொருள்களைத் தம் ஸ்தாபனங்களே தக்க விலைகொடுத்து எடுத்துக்கொள்ளுகின்றன. விலையாக்கவேண்டுமென்ற விசாரமே கிடையாது. அமெரிக்காவில் வெண்ணைக் கம்பெனி ஒன்று இருக்கிறது. பல கிராமங்களில் உள்ள விவசாயிகள், குடித்தனக்காரர்கள் தங்களிடம் மிஞ்சும் வெண்ணையை அக்கம்பெனிக்குக்கொடுத்து விடுகிறார்கள். இக்கம்பெனிக்காரர்கள் சரக்கின் தரத்தைப்பார்த்துத் தக்க விலை கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் ஏற்றுமதியாகும் போதும் ஒரே ஸ்தாபனத்தின் மூலமாய்த்தான் விற்பனை ஆகிவருகிறது. இதனால் அவர்கள் வைத்த விலை பலித்து விடுகிறது.

நம் நாட்டிலும், இத்தகைய கூட்டு வியாபார ஸ்தாபனங்கள் ஆங்காங்கு ஏற்பட்டாலொழிய, நம் வியாபாரமும், விவசாயமும் ஓங்கி வளரமுடியாது. இதில் அதிகப் பொறுப்புள்ளவர்கள் விவசாயிகளும், தொழிலாளர்களுமே யாவர். இத்தகைய ஸ்தாபனம் திருவாங்கூர் ஏல விவசாயிகளால் நம் தென்னாட்டில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது போற்றத்தக்கதே யாகும். முக்கியமான ஒவ்வொரு ஏற்றுமதிச் சரக்கிற்கும் இத்தகைய ஒவ்வொரு கூட்டு ஸ்தாபனமிருந்து, அதில் அந்தப் பொருள் உற்பத்திசெய்யும் விவசாயிகளும், தொழிலாளர்களும்பங்குக்காரர்களாகிப்பொறுப்புடன் நடத்த முன் வந்தால், அடுத்த பத்தாண்டில் நாமும் அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள் போல் உலக ஜனங்களின் கவனத்தையும், மதிப்பையும் பெறுவோம் என்பதில் ஐயமில்லை. நம் விவசாயிகள் இதைப்பற்றிச் சிந்திப்பார்களாக.

வை. நடேசன்.

# எனது அனுபவம்.

ஏல விவசாய சங்கம் ஏற்பட்டதின் மூலம் நாம் அடைந்த, அடைகிற, அடையப்போகிற உன்னத நன்மைகளை அளவிட்டுச் சொல்ல என்னால் முடியவில்லை. நாம் மட்டுமோ என்றால், உத்தம பாளையம் தாலுகாவே நம் சங்கத்தின் வளர்ச்சியை, கூட்டுறவை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறது. நாலு ஐந்து மாதங்களாகச் சரக்கு விற்பனையாகவில்லை. எல்லாம் கிட்டங்கியில் அடைபட்டுக் கிடந்தன. வட்டிக்குப் பணங் கொடுக்கும் கடைக்காரனிலிருந்து வயலி பொழுதளவும் வேலை செய்யும் தொழிலாளர்கள் வரையில் பணக்கஷ்டத்தையறிய இடமேற்பட்டுவிட்டது. எங்கும் பஞ்ச நாடாய்க் கிடந்தது. வீட்டிலுள்ள இடைஞ்சல்களைக் களைந்தெறியலாமென்ற எண்ணம் உருவடைவதற்கு முன்னமே வெளியிலுள்ளவர்களால், அந்நியர்களால் ஒரு புறமும், வியாபாரிகளால் மற்றொருபுறமுமாக நாம் எதிர்பாராத வண்ணமாய்த்தொந்தரிக்கப் படவேண்டி வந்தது. சகோதரர்களே, அவர்கள் தொந்தரவு எம் மாத்திரம்! நம்முடைய கூட்டுறவின் முன் எத்தனை ஆற்றல் படைத்தவனும் நிற்க இனித் தலைகுனிவான். நம் ஒற்றுமை பலப்பட்டு வருகிறது. சரக்கு விற்பனைக் கமிட்டியார் ஒழுங்கான முறையில் சீக்கிரமாக நமது சரக்கை விற்றுப் பணமாக்கித்தருவர். இனி வெளி வேலைக்கு ஒரு சிலரை நியமித்துவிட்டு, உள் வேலைக்கு தோட்டக்கிருஷிக்கு ஆதாரமான காரியத்திற்கு, பெரும் பான்மையாய் நாம் பலரும் தலைப்பட்டு விருத்தி செய்யுங் காலம் அணுகிவிட்டது. நம்பிக்கை வையுங்கள். ஒன்று சேருங்கள். சந்தேகமும், ஒற்றுமை யின்மையும் நம்மைத்தாமே படுகுழியில் தள்ளிவிட்டு மேலே நின்று கொக்கரித்துக் கைதட்டும். நம்பிக்கையும், ஒற்றுமையும் நமக்கு வெற்றிமாலை சூட்டி, வீர மேடையின் மீது ஏற்றிவைத்துக் கீழே பணிந்து நிற்கும்.



ஒவ்வொரு குடியானவனும் தன் தோட்டத்திற்குப் போனவுடன் சிறிது சந்தோஷமும், பெரிது வருத்தமும் அடைகிறான். வருத்தமடையக் காரணமென்ன? தன் ஜீவாதார ஏலச் செடிகளில் பல யாதோ ஒரு பெரும் வியாதியினாற் பிடிக்கப்பட்டுப் பாக்கி நின்ற பயிர்களையும் தொத்திச் சேதப்படுத்தி வருவதோடு, அடுத்த ஆண்டுக்கு இவ்வளவு செடிகள் இங்கேயிருக்குமோ? இல்லையோ? என்ற பீதியேயாகும். இதனால் ஏக்கம் பிடித்துத் தன் ஜாகைக்குத் திரும்புகிறான். கழிந்த ஆண்டில் சீக்கான பயிர்களைக் களைந்தெறிந்துவிட்டுப், புதிதாகப் பொறுக்கியெடுத்த நல்ல நாற்றுக்களை நட்டு விட்டு, இப்பொழுது இந்த ஆண்டு முதலில் போய்த் தோட்டம் பார்க்கையில் தெரிந்தெடுத்த அவைகளில் அநேகம் வியாதியினால் பீடிக்கப்பட்டவைகளாயிருக்கின்றனவே. அவன் என்ன செய்வான்? அவன் ஏலத்தைப் பணமாக்குகிறதற்கு முன்னர் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறானென்று பிரத்தியாறிய அவகாசமில்லாது கிடக்கிறது. பிடிவாதமான மழை, தொந்தரவில்லாது இரத்தத்தை உறிஞ்சும் அட்டை, சகிக்கமுடியாத குளிர், உறங்கவிடாத வண்டு, நடக்க முடியாத தூரம், அடக்கமுடியாத வனமிருகங்கள்! அந்தோ!! இவைகளையெல்லாம் சகித்துக்கொண்டு, மீறிச்சென்று விடலாம். குடும்பத்தை விட்டு விட்டுத் தனியே எத்தனை வருடமானாலும், இருந்து விடலாம். செடி நல்ல நிலைமையில் இருக்கவேண்டுமே? அதுவே உயிர் நிலை. அது போய் விடில், நம்முடைய கதியென்ன வாகும்? பாண்டிய நாட்டிலுள்ள சம்பாத்தியங்களையெல்லாம் பெயர்த்தெடுத்தல்லவோ நாம் மலையில், ஏலத்தோட்டங்களில் நம்முடைய ஜீவாதாரத்தை நட்டு விட்டோம். ஆண்டாண்டு தோறும் கஷ்ட சாகரத்தில் அமிழ்ந்

திருந்தும் பின்னோராண்டிலாவது பலனை யடையலாமென்று எண்ணுவதற்கு முன்னமே, ஒரு பக்கம் தடைகள் புள்ளி விழத் தொடங்குகின்றனவே. பதிவான வாழ்க்கையைப் பெரும்பாலோர் ஏல மலையிலேற்படுத்திக்கொண்டனரே. நல்லது. இது ஒரு சோதனைக் காலம். முன்னேற்றமடைவதற்கு முன் ஒவ்வொருவனும் எவ்வளவு கேவல திசையிலிறங்கியிருக்கிறானென்ற விபரம் உங்களுக்குத் தெரிந்திருக்குமானால், நீங்கள் அதைர்யப்படமாட்டீர்கள். "தாழ்ந்தவன் மேலே போவான்" என்ற முதுமொழிப்படி ஒவ்வொரு முன்னேற்றமடைந்திருக்கிற தொழிலும் அதற்கு முன் எவ்வளவு தூரம் கேவலமாய், இல்லாது மறைந்துகூடப் போகும்படியாய் ஒவ்வொரு காலங்களில் இருந்ததென்பதை ஆலோசித்துப் பாருங்கள். நம்முடைய வெற்றிக்கே, முன்னேற்றத்திற்கே இது தோன்றியிருக்கிறது. இது நமக்கு ஒரு கொடிய சோதனைக் காலம். ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் கூடிய மட்டில் பலத்தைப் பிரயோகித்து, உயிரைப் பாதுகாக்கவேண்டிய காலமாயிருக்கிறது. கால தாமதம் நஷ்டத்தைப் பயக்கும். உடன் வேலையை யாரம்பிப்போம். வாருங்கள். நாம் உண்மையில் ஏல விவசாயிகள்தாம் என்று பிறர் கண்ணியப் படுத்தும் விதமாய் நடந்து கொள்வோம். வெளியேறுங்கள், தூக்கமபக்கத்தினின்று கிளம்புங்கள். நாளையோ, மறு நாளிலேயோ நம்முடைய ஜீவாதாரச் செடி, தெய்வீக வாசனை பொருந்திய பரிமளச் செடி, ஏலச்செடி இப் பிரபஞ்சத்திலே அழிந்து போயிற்றென்று நம்மிடத்தில் ஒப்புவித்த இயற்கைக் கடவுள் குறைகூறு வண்ணம் நடந்து கொள்வோம். எழுந்திருங்கள்!

சகோதரர்களே, ஏலக் கிருஷியில் அனுபவம் முதிர்ந்தவர்களே, வியாதி எங்கிருந்து வந்தது? எவ்விதம் பரவுகிறது? அதனை எப்படித் தடுக்கிறது? என்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்யப்போ[illegible]இடம், பொருள், ஏவல் இல்லாது இது காறும் கிடந்தது: தேவ



கிருபையால், கூட்டுறவின் மகத்துவத்தால், சங்கத்தின் மூலம் இப்பொழுது கொஞ்சம் இடங்கிடைத்திருக்கிறது. "ஏலவிவசாயி" என்ற ஒரு மாதாந்தப் பத்திரிகை ஒவ்வொரு குடியானவனிடத்திலேயும் போய்த் தர்க்கிக்கப்போகின்றது. அதன் மூலம் இனியாவது மேல்கண்ட விஷயங்களைத் தர்க்கித்து, உண்மை முடிவை எதிர்பார்க்குங்காலம் சமீபித்து விட்டதென்று தைர்யமாய்ச் சொல்லலாம்.

வியாதியை மைசூரினின்றும் கொணர்ந்த செடிகளின் விதைகளிலிருந்து நாட்டுச்செடியைப் பற்ற ஆரம்பித்ததென்று பெரும்பாலோர் நினைக்கின்றனர். ஒருக்காலிருக்கலாம். அதை மறுக்க முடியாது. என்னுடைய பழக்கத்தில் சிறிய அனுபவத்தில் அதை ஆதரிப்பதோடு இன்னும் இரண்டு மூன்று காரணங்களாலும் அது உண்டாகியிருக்கலாமென்றெண்ணுகிறேன்.

ஏலச்செடி, மஞ்சள், இஞ்சி, சன்னையினத்தைச் சேர்ந்தவை என்று தாவர சாஸ்திரிகள் சொல்லியிருக்கின்றனர். நான் அங்கங்கே காணப்படும் குறைவான சில சன்னைத் தடைகளில் இந்நோய் பரவியிருக்கக் கண்டிருக்கிறேன். மானிடப்பூண்டு பெருகப் பெருக வியாதிகள் பலவும் பலவிதமாய்த் தோன்றி வருகின்றன. முன்னாளில் குடியானவர்கள் பலனெடுப்புக் காலத்தைத் தவிர்த்து மற்றைய காலங்களில் தோட்டத்திற்குப்போய் வேலை பார்ப்பது அபூர்வமாயிருந்திருக்கிறது. அது கொண்டு உடன் பிறந்த இந்நோயைக்காண அவர்களுக்கு அவகாசமிருந்திராதென்று நினைக்கிறேன். இது இயற்கை. முன்னர் ஒரு சிறு அளவிற்குள் ஏலச்செடி பயிராக்கப்பட்டு வந்தது. ரொம்பவும் பூச்சியத்திலிருந்தது. இப்பொழுது அளவுகடந்த விஸ்தீரணமுள்ள பாகங்களில் பயிராக்கப்படுகிறது. இக் காரணத்தால் பெருக்கத்தின் மூலம் வியாதி ஏற்படுவது சகசம். இப்பொழுது இயற்கையாகவும் பெருக்கத்தினாலும் வியாதி தோன்[illegible]கோடு [illegible]

வில் சொன்ன செயற்கையையும் சேர்த்துக்கொள்வோம். இச் செயற்கையினாலும் நோய் உண்டாவது முண்டு. நம் செடிகளை நோய்க்கிடந்தரும் வண்ணமாய்ச் சிற்சில இடங்களில் கிருஷி செய்யப்பட்டு, அதன் மூலம் நாலு பக்கங்களிலும் பரவியிருக்கவேண்டுமென்றும் யூகிக்கிறேன். என்னிலும் கூடிய அநுபவசாலிகளையும், என்னைப்போன்ற மற்றையோர்களையும் இவைகளைத்தீர விசாரித்து முடிவு கட்டக் கேட்டுக்கொள்கிறேன்.

கூடுதல் வெயிலடி:- அளவுக்கு மிஞ்சிய வெயிலை, வெயிலிலுள்ள உணவைச் செடிக்குக்கொடுப்பதொரு காரணமாகும். அதன் மூலமாகச் செடிகள் மழைக்காலத்தில் செழிமையேறி வேனிலாரம்பிக்கவும் தண்டுகள் வண்ணம் சிறுத்து, இலைகளினோரங்கள் கருகி, நாளடைவில் புள்ளிகள் தோன்றியும் தோன்றாமலும் சருகாய்க் காய்ந்து, மாண்டு போகின்றன. இத்தகைய இடங்களில் ஓராண்டு ஈராண்டு கழிவதற்கு முன் கிழங்குவரை உஷ்ணந்தாவிச் செடிகள் நாசமடைகின்றன.

கூடுதல் ஈரம்:- மலை வளத்தில் ஈர சம்பந்தமான நீர்ப் பிடிப்புள்ள கண்டங்களில் பயிர்களைக் காலங்கணக்கறியாது, பயிர் செய்யப்பட்டு, அப்பூமியிலுள்ள நீர்ப் பிடிப்பை கான்கள் வழியாக வேறு திருப்பாது கிருஷி செய்வதினால், ஏலச்செடி வளர்ச்சி குன்றி, இலை, தண்டு, கிழங்கு, வேர் முதல் சிறுத்து, வெளுத்து நாளடைவில் தனித்தனியாகக் கைதொடுவதற்கு முன் கீழே விழுந்துவிடுகிறது.

ஒழுங்கீனமான மர மடிப்பு:- ஒவ்வொரு தோட்டங்களில் கூடுதல் நிழலிருப்பதினால், தேவையான சூரிய கிரணத்தின் சாரத்தைச் செடிகள் எடுத்து உட்கொள்ள இயலாததுகொண்டு தடைகள் நின்ற நிலையிலேயே கவனியாது அழிகின்றன.

மற்றொரு விஷயம் வியப்பைத்தரும் ஆயினும் முதிர்ந்த உலகத்தின் முடிவுக்கு அதையும் விட்டிருக்கிறேன். வீட்டுக்கு வில



க்கமான பெண்களின் சாயல் சம்பந்தம் செடியைப் பெரிதும் வாட்டுகிறதென்று என் சிற்றறிவில் நினைக்கிறேன். அதைத் தாவர விற்பன்னர் டாக்டர் போஸ்போன்ற மேதாவிகளிடம் விட்டுப் பரீட்சிக்கவேண்டும். நம்முடைய சாஸ்திரங்களில் பெண்கள் நகைப்பு, பாட்டு, இவைகளின் சம்பந்தத்தால் தளிர்த்து, அரும்பிப், பூத்துக், காய்க்கும் மரங்களிருந்திருக்கின்றனவென்று கேட்டிருக்கின்றோம். மணமுள்ள செடிகளின் பக்கத்தில் மாதவிடாயானவர்களைச் செல்லாது தடுக்கிறோம்.

இன்னும் சொல்லவிரும்புவதொன்றுண்டு. அதாவது மண் வெட்டில்லாமை. எவ்வளவு கொழுமையுள்ள பூமியாயிருந்தாலும் வருடந்தோறும் பூமியைக் கிளறிப் பண்படுத்தி வருவதினால், செடிகளுக்கு ஆதரவுண்டென்று நான் சொல்ல விரும்புகிறேன். கொழுமையான பூமி சாரத்தில் செடிகள் உணவு எடுத்து உட்கொள்ள இடையூறாகச் சில சிறு பதார்த்தங்களும், உட்கொள்ள முடியாதபடி பல கடின பதார்த்தங்களுமிருக்கின்றபடியால் செடிகளின் உணவுக்கு லாயக்கில்லாமல் ஜீரண சக்திக்கிடைஞ்சலாய், வியாதிக் கிருமிகளுக்கிடந்தரக் கூடியதாய், கொழுமை ஆக்கப்பட்டிருக்கிறது. அது கண்டு ஏற்கனவே பூமியின் மேற்பாகத்திலுள்ள செடிக்குசத்துக்குறைந்த உணவைக் கீழேதள்ளிப் பூமியின் கீழேயுள்ள கொழுத்த மண்ணைச் சூரிய வெளிச்சத்திற்கும், மழைக்கும் புரட்டிவிட்டு மாற்றிக்கொடுக்கவேண்டும். இவைகளிப்படியிருக்க இன்னும் பல காரணங்களிருக்கலாம்.

முதலாளிகள், ஏலத்தோட்டச் சொந்தக்காரர்கள் மேற் பார்வையாளர்களை ஆடுமாடு மேய்ப்பவர்களைப்போன்று தொழிலாளர்களை மேய்க்கமட்டும் நியமித்திருக்கிறார்கள். பல மேற்பார்வையாளர்கள், ஆட்களை வேலை வாங்குவதும், விளைந்த மகசூல்களை எடுப்பதும் தான் தங்கள் வேலையென்று எண்ணி வேலை செய்கிறார்கள். அவர்கள் தினசரி வாழ்க்கையில் காணப்படும் செடிகளின் அரிய நுட்பங்களை, மாறுபாடுகளை, அநுபவங்களைத்தெரிய

ஆசைப்படுகிறார்களில்லை; தூண்டுகிறார்களில்லை. இனி அங்ஙனமன்றி அவர்களுக்குத் தெரிந்தமட்டில் ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு அநுபவத் துண்டுப்பிரசுரம் தரக் கட்டாயப்படுத்தவேண்டும். போட்டிபோட்டு உழைக்க, வியாதியைத் தடுக்க, கூடுதல் பலனைப் பயக்க வேண்டிய மாதிரிகளைப் பிரயோகிக்கத் தக்கபடி சங்கம் தூண்டிக்கொண்டிருக்கவேண்டும். அப்படிக்கில்லையென்றால், கூடுதல் சம்பளம் கொடுத்தாவது தாவர ஆராய்ச்சியில் முதிர்ச்சிபெற்ற ஒருவரைச் சர்க்கார் ஒத்தாசையின்பேரில், தேர்தலின்பேரில் சங்கத்தார் நியமனம் செய்து சங்கபரிபாலனத்திற்குளிருக்கிற ஒவ்வொரு தோட்டக்காரரையும், மேற்பார்வையாளரையும் படிப்பித்து ஆராய்ச்சி செய்யப் பழக்குதல் வேண்டும். இல்லையென்றால் சகல தோட்டத்தையும் கங்காணிக்க, ஆராய்ச்சி செய்ய, அநுபவ முதிர்ந்த குடியானவர்களின் கமிட்டியொன்றை நியமித்து ஆங்காங்கே வருடந்தோறும் போய்ச்சுற்றிப்பார்த்து அவர்கள் கண்டு கேட்ட அநுபவ ஆராய்ச்சிகளடங்கிய துண்டுப்பிரசுரங்களை ஒவ்வொரு குடியானவனுடைய வீட்டிலேயுப்கொண்டுபோய்ப் போட்டுவரவேண்டும்.

இனி வியாதி எவ்வாறு பரவுகிறதென்பதை எனக்கறிந்த அளவில் நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு தோட்டத்தில் ஒரே ஒரு வியாதிச்செடி மற்றைய நல்ல செடிகளையெல்லாம இரண்டு மூன்று வருடங்களுக்குள் அழித்து விடுகின்றது. வியாதி பக்கத்திலுள்ளவைகளை ஒரு புறமாய் ஏகோபித்துப் பிடித்துக் கொண்டு போவது அதிக சாதாரணமன்று. பல வேறிடங்களில் ஊடுடே சிதறப்பிடித்திருப்பது தான் சாதாரணம். நாளடைவில் காற்று, தேனீ மூலமாக வியாதிச் செடியின் பூவிலுள்ள மகரந்தப்பொடிகள் பல வேறு செடிகளிலுள்ள பூக்களில் தாவப்பெற்று வியாதி பரவுகிறது. ஒரு வியாதிச் செடி ஒரு தேரியை மாத்திரமல்ல, ஒரு தோட்டத்தை மாத்திரமல்ல, ஒரு பகுதியை மாத்திரமல்ல, ஏலச்செடி எங்கெங்கே வியாபித்திருக்கிறதோ, காற்றும், தேனீயும் எங்கெங்கே போய் நுழைகிறதோ அங்கங்கெல்லாம்



வியாதி தீப்பிடித்தாற்போல் பிடித்து அழிக்குமென்பது என் துணிபு. வியாதி பிடிக்கக்கூடிய காலம் ஏலச்செடி பூக்குங்காலமாகும். அது கொண்டு ஏலத் தோட்ட விருத்தி முறைகளில் வியாதியைத் தடுக்குமுறைகளால் முதலாவது ஒவ்வொரு தோட்டத்திலும் ஒவ்வொரு குடியானவனும் தன் தோட்டத்து வியாதிச் செடியை எப்படிக்களைந்தெறியப்பாடுபடுவானோ அதே போன்று அடுத்தவர்களையும் தானே நேரிலிருந்து பிடுங்கியெறிய வற்புறுத்தவேண்டும். இந்த வருடத்துப் பலனையெடுத்துக்கொண்டு அடுத்த ஆண்டில் புதுப்பித்துக்கொள்வோமென்ற ஒரு சில தோட்டக்காரர்களின் செயற்கையால் ஏல விவசாய உலகம் இப்போது சொல்ல அடங்காத துன்பத்திலாழ்ந்து கிடக்கிறது. இனியும் காலதாமதஞ் செய்தால் உள்ளதை யிழப்பதோடு, மதுரைஜில்லாவில் மட்டுமல்ல, சென்னை இராஜதானியையே மயங்கச்செய்து கொண்டு நிற்கிற ஏல விவசாயச் சங்கத்தையும் ஆழ அமிழ்த்தி விடுவார்கள்.

இரண்டாவது தேர்ந்து பொறுக்கியெடுத்த நல்ல விதைகளைக் கொண்டு பாத்தியில் விதைத்து, நாடோறும் போற்றி வளர்த்து வயதுவரவும் தோட்டத்திலெடுத்து நடவேண்டும். பெரிய தட்டைகளைப் பிடுங்கி நடுவது அவ்வளவு சிலாக்கியமாகக் காணப்படவில்லை. சீக்கிரம் உண்டாகிச் சீக்கிரம் அழிந்து போகிறது. மேலும் அவைகளிலேயும் வியாதி உள்ளுக்குள் பாய்ந்து நுழைந்து கிடக்கிறது. நல்ல விரைகளையும் இரசாயன முறையில் நனைத்துப் படுக்கையிலிட்டால் மிகவும் நலம். சகோதரர்களே? கூடுதல் கவனம், சிரத்தை, ஏலப்பயிரில் நாம் செலுத்த, இயற்கைமாதேவி நம்மைக்கூவியழைக்கிறாள். விற்பனையிலேயே நாம் முழுக்கவனத்தைச் செலுத்திக்கொண்டு நிற்கிறோம். அதைக்குறைகூறவில்லை. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். காலதாமதமானால் ஏலப்பழத்திலிருந்தும், நல்ல விதைகளைப்பொறுக்கியெடுக்கக் கஷ்டமாய் முடியும் போலிருக்கிறது. நீங்கள் என்னென்ன முறைகளைக் கையாளுகிறீர்கள்? நினைத்திருக்கிறீர்கள்? உங்களு

டைய சிநேகிதர்களும் அக்கம்பக்கத்தார்களும் என்னென்ன முறைகளைச் சொல்கிறார்கள்? "ஏலவிவசாயி" யினிடம் சொல்லுங்கள். ஆயிரக்கணக்கான ஏக்ரா விஸ்தீரணமுள்ள ஏலத்தோட்டக்காரர்களுக்கு ஒரு மாதிரித் தோட்ட மேற்படுத்த இடமேற்படாவிட்டாலும், அவர்களுடைய சர்க்காரைக்கொண்டாவதுஒன்று ஏற்படுத்த முடியவில்லையா? இலட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கும் ஏலத்தோட்டக்காரரும் தங்கள் பண்ணைகளில் ஒருவரையாவது தாவர சாஸ்திர ஆராய்ச்சிக்கு அனுப்ப இயலவில்லையா? நூற்றுக்கணக்காகச் சம்பாதிக்கும் சங்கம் ஏல விவசாய விருத்திக்காதாரமான புத்தகங்கள், பத்திரிகைகள், பிரசுரங்களைச்சேர்த்து ஒரு விவசாய விடுதி யேற்படுத்த முன்வர முடியாதா? பணத்தைப் பாரா தேயுங்கள். காலத்தை வீணாக்காதேயுங்கள். சிரமத்தைக் கவனியாதீர்கள். சுவரை வைத்துச் சித்திரம் எழுதுங்கள். நம்மால் சாதிக்கமுடியாத தொன்றில்லை. முயற்சி பயனைத்தரும், வெற்றியையும் பயக்கும்,

கடைசியாகச் சொல்லிக்கொள்வதொன்றுண்டு. மேற்குமலைத் தொடரில் முன் காலங்களில் மழை 1 0 இஞ்சிலிருந்து 200 வரை பெய்திருக்கிறது. இப்பொழுது 1 , 120 க்குமேல் தாண்டிச் செல்ல மார்க்கமில்லை. மாறுகின்ற வியாதி தோன்றும்; பலன் குறையும். ஆகையால் வனங்களைப் பராமரிக்கச் சர்க்காரைக் காட்டிலும் நாம் கூடுதலாய் வேலை செய்யக்கடமைப் பட்டிருக்கிறோம்; மென்பதையும் ஞாபகமூட்ட முன் வருகிறேன்.

S. வடிவேல்,
சூப்பிரண்டு,
பொன்முடி எஸ்டேட்.

# ஏல விவசாயி.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ ஞு புரட்டாசி மீ
1927 ஞு செப்டேம்பர்-அக்டோபர் மீ | இதழ் 6

## திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம்.

(முன் 70 ம் பக்கத் தொடர்ச்சி.)

1920-ம் வருஷம் முதல் ஏல விவசாயிகளின் நிலைமை ஒரே விதமாகவேயிருந்து வந்தது. கம்பம், தேவாரம் முதலிய ஊர்களில் தனிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், கூடுதலான துலாப்படியுள்ளவர்கள் சில சமயங்களில் ஏலத்தில் விற்று வந்தபோதிலும் எப்போதும்போல இஷ்டப்படி விற்கும் முறை இருந்தே வந்தது. இந்த வருஷத்தில் கோம்பை கனம் உ. ம. சே. முகைதீன்பிள்ளை ரூவுத்தரவர்கள் இந்தியாவில் ஒரு சுற்றுப்பிரயாணம் செய்து வந்தார். அப்போது பம்பாய், காரச்சி, கல்கத்தா முதலிய ஏலச்சரக்கு வியாபாரம் நடக்கும் இடங்களுக்குச்சென்று ஏலச் சரக்குகள் விலை குறைந்து விற்பதற்குரிய காரணமென்ன வென்பதையும், அதினுடைய அழிவைப் பற்றி

யும், இன்னும் இது விஷயமான சகல விஷயங்களைப்பற்றியும் அங்கங்குள்ள அநேக வியாபாரிகளிடமும், மற்றவர்களிடமும் கேட்டதில், ஏல விவசாயிகள் ஒற்றுமையில்லாமல் குறைந்த விலைக்கு ஏலச் சரக்குகளை விற்று விடுவதாலேயே விலை குறைந்து விற்கிறதென்றும், ஏல விவசாயிகள் சங்கத்தின் மூலமாவது, கம்பெனியின் மூலமாவது ஒன்று சேர்ந்து ஒரு விலையை நிர்ணயப்படுத்தி அதற்குக் குறைத்துக்கொடுப்பதில்லையென்று வைத்துக்கொள்வீர்களானால் நீங்கள் சொல்கிற விலைக்கு வியாபாரிகள் வாங்கித்தானாக வேண்டுமென்றும், உதாரணமாக ஸ்பெயின் தேசத்திலுள்ள குங்குமப்பூ சில வருஷங்களுக்கு முன்னர் ஒரு ரூபாயெடையை ஒரு அணாவிற்குக்கூடக் கேட்பாரில்லாமலிருந்ததென்றும், அதன் மேல் அதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஒன்று சேர்ந்து ஒரு கம்பெனி ஏற்படுத்தி அதன் மூலம் எல்லாக் குங்குமப்பூக்களையும் ஒன்று சேர்த்து ரூபாயெடை ஒரு ரூபாய்க்குக் குறைந்து கொடுப்பதில்லையென்று தங்களுக்குள் கட்டுப்பாடு செய்து கொண்டதன்மேல் ஆரம்பத்தில் சிறிது கஷ்ட மேற்பட்டபோதிலும், பின்னர் அதன் பயனாக ரூபாயெடை ரூ 1-8-0 முதல் இரண்டு ரூபாய் வரை விற்றதென்றும் (இப்போது ரூபாயெடை நான்கு ரூபாய் வரை விற்கிறது) இச் சரித்திரத்தைச் சொல்லி, நீங்களும் இவ்விதம் செய்து கொண்டாலொழிய உங்கள் ஏலச் சரக்குகள் விலையேறி விற்காதென்றும், சில சமயம் தொலை தூரங்களில் விலை யேறி விற்றாலும் அதை வியாபாரிகள் விவசாயிகளுக்குச் சொல்லமாட்டார்களென்றும், எப்போதும் ஒரே நிதானத்தைக் காட்டிக் கூடுதல் இலாபம் அடையப்பார்ப்பார்களென்றும், தப்பித்தவறி வியாபாரிகளுக்குள் ஒற்றுமை குறைந்து தங்களுக்குள் போட்டி ஏற்படும்போது தான் கொஞ்சம் விலை கூட்டி வாங்குவார்களென்றும், அதனால் விவசாயிகளுக்கு யாதொரு நன்மையும் ஏற்படாதென்றும் (தனிப்பட்ட விளைபொருளைக் கூடுதல் விலைக்கு விற்கும் முறையை) ஒரு ஸ்பெயின் வியாபாரி சொன்னதுடன் மற்ற வியாபாரிகளிடமும் ஏலச் சரக்கு வாங்கிவரும் வியாபாரிகளின் சாகஸங்களையும், விவசாயிகளின் ஏமாளித்தனத்தையும் பற்றி ஏல விவசாயிகள் அறியு



மாறு பத்திரிகைகளின் வாயிலாக அங்கிருந்தே எழுதிப் பிரசித்தம் செய்திருக்கிறார். அதை அநேகர் கண்ணுற்றிருக்கலாம். கடன்பட்ட நமது விவசாயிகள் தங்கள் கஷ்டத்தின் கொடுமையால் ஏதாவது முன்னேறுவதற்கு வழி ஏற்படாதாவென்று கவலை கொண்டிருந்த சமயத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த மேல் கண்ட விஷயங்களானவை விவசாயிகளைத் தட்டியெழுப்பிற்று. ஒவ்வொருவரும் விஷயங்களை ஆராயத் தொடங்கினர். அத்துடன் கனம் ராவுத்தரவர்கள் ஊருக்கு வந்தவுடன் 20-10-20ல் அடியில் கண்ட விஞ்ஞாபனம் ஒன்றையும் வெளியிட்டார்கள். அது பின்வருமாறு:—

## ஏல விவசாயிகளுக்கோர் விஞ்ஞாபனம்.

சகோதரர்களே! கவனித்து வாசியுங்கள்!! ஒற்றுமையைக் கைக்கொண்டு, நல்ல இலாபத்தையும், கீர்த்தியையும், சம்பாதித்து வையுங்கள்.

ஆறறிவு படைத்த நீங்கள் ஐயறிவு படைத்த ஜெந்துக்களிலுங் கேவலமாக நடந்து கொள்வதைக்கண்ட மேதாவிகள் கவலைப்படுகின்றார்கள். என்போலிய எழுத்தறிவில்லாதவரும் நகைக்கின்றார்கள். இதுவுங் கண்களுக்குப் புலப்படவில்லையா? ஆ! சகோதரர்களே சில நாட்களுக்கு முன் 25 முதல் 30 ரூ வரை விற்று வந்த ஏலச் சரக்குகளை தற்போது 15 ரூபாய்க்கும் குறைத்து வாங்கவேண்டுமென்ற கருத்துடைய வியாபாரிகளை நீங்கள் காணவில்லையா? ஏ! விவசாயிகளே!! ஏலமலையை உண்டு பண்ண நீங்கள் பட்ட கஷ்டமென்ன? கவலையென்ன? யானை, காடி, முதலிய துஷ்டமிருகங்களாலும், அட்டை, செந்தட்டி, தட்டப்பலா முதலிய பூண்டுகளாலும் அடைந்த உபத்திரவங்களென்ன? இவைகளை நினைக்கும்போதே என்மனம் பதைபதைக்கின்றது, கைகால்கள் நடுக்கமுறுகின்றன. என்னைப்போலவே நீங்களும் கஷ்ட நஷ்டத்தின் பேரில் தான் ஏலத்தோட்டங்களை விருத்திக்குக் கொண்டுவந்திருப்பீர்களாகையால் நாம் பட்ட கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் கூலி கிடைக்க வேண்டுமானால் 30 ரூபாய்க்குக் குறைந்த விலைக்கு நீங்கள் உங்கள் ஏலச் சரக்குகளை விற்கத்துணியாதீர்கள். "கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தன்னால் வந்து சேருமென்பது" உண்மையல்லவா? அது போலவே ஒவ்வோர் ஏல விவசாயிகளும் 30 ரூபாய்க்குக் குறைந்த விலைக்கு விற்பதில்லையென்ற வைராக்யம் வைத்துக்கொள்வீர்களாகில் குறிப்பிட்ட விலைக்கு மேலாகவே தே

வைப்பட்டவர்கள் நம்மைத்தேடி வந்து வாங்கிப்போவார்களென்பதை நிச்சயமாகச் சொல்லுகிறேன். எப்படியென்றால் நமக்குத் தேவையான எந்தச்சாமான்களும் தற்சமயம் விலையேறி நிற்கும்போது வாங்காமலா காலங்கடத்துகிறோம்? அதுபோல ஏலக்காயை உபயோகப்படுத்தும் ஜனங்கள் என்ன விலையானாலும் வாங்கித்தீர்வார்களென்பது உறுதி.

எனதின்னுயிர்த் தோழர்களே!! வியாபாரிகள் கேட்கும் விலைக்கு நாம் கொடுக்க முயற்சிப்பதினால் தான் நாளுக்கு நாள் விலை குறையக் காரணமாகின்றதென்பதென் கருத்து. எல்லா ஏல விவசாயிகளும் ஒன்றுபட்ட மனதோடு விளைபொருளைக் கவனித்து விலையை நிச்சயப்படுத்தி இன்ன விலைக்குக் குறைத்துக் கேட்டால் கொடுக்கமுடியாதென்று மறுத்துவிடுவீர்களேயானால் நாளுக்கு நாள் விலை கூடிக்கொண்டே போகுமென்பது எனதனுபவத்தில் கை கண்ட விஷயம். இதை நீங்கள் எல்லோரும் பிரத்தியட்சத்தில் காணவேண்டுமென்ற ஆசையிருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கிராமத்திலுள்ள ஏலக்குடிகள் யாவரும் ஒரே ஒப்பந்தமாக அந்த அந்த ஊர்ச் சரக்குகளின் தன்மைகளுக்குத் தக்கபடி விலைகளைத் திட்டப்படுத்தி, அதற்குக் குறைவாக விற்பதில்லையென்று கடவுள் பேரில் சுமையை வைத்துப் பிரமாணிக்கம்செய்து கொள்வீர்களேயானால் எல்லாம் செய்ய வல்ல கடவுள் நமது திடசித்தத்தை அறிந்து கூடிய சீக்கிரத்தில் நம்முடைய வேண்டுகோளைச் சம்பூரணமாக்கித் தருவாரென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

கிராமத் தலைவர்களே! பிரபுக்களே!! தூக்கத்தை விட்டொழித்துக் கண்ணை விழித்துப் பார்த்து உலகத்திலுள்ள சமஸ்த விளைபொருள், செய்பொருள்களும், விலையேறிக் கிடக்கும் காலத்தில் நமது ஏலச் சரக்குக்கு மாத்திரம் விலை குறைந்துகொண்டேயாக் காரணமென்னவென்பதைக் கண்டுபிடியுங்கள்; உற்றுப்பாருங்கள்!! அப்படி உற்றுக் கவனித்தால் நமக்குள் கட்டுப்பாடும் ஒப்பந்தமுமில்லாதிருப்பதே முக்கிய குறையென்பதை வெள்ளிடை மலைபோலவும் காண்பீர்கள். நம்முடைய குற்றங் குறைகளை நீங்களுணர்ந்த அதே நிமிஷத்தில் அந்தந்த ஊரிலுள்ள ஏலக் குடியானவர்கள் ஒன்றுசேர்ந்து, ஓர் தலைவரை நியமித்து, ஏழை விவசாயிகள் தங்களின் கட்டுப்பாட்டில் இணங்கி நடப்பதற்காக வேண்டிய பணவுதவிகளைச் செய்து எல்லா விவசாயிகளும் நல்ல இலாபத்தை அடையும்படி முயற்சி செய்து கொள்ளுங்கள்.



கட்டுப்பாடில்லாது சிதறிக்கிடக்கும் நமது ஏல விவசாயிகளை ஒன்றுசேர்ப்பதற்கும், ஏழை விவசாயிகளை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவதற்கும் இது தான் சமயம். இச்சமயம் தப்பினால் எச்சமயமும் வாய்க்காமற் போய்விடும்.

ஆகையால் பிரபுக்களே! கிராமத்தலைவர்களே!! பெரிய மிராசுதார்களே!!! ஏராளமான திரவியங்களைப் புலி, கரடி, யானைகள் சஞ்சரிக்கும் வனாந்திரங்களிற் கொண்டுபோய் விரயஞ்செய்து கடனுக்காளாகிக் கொண்டு வந்திருக்கிறீர்களல்லவா? அக்கடனைத் தீர்க்க ஒற்றுமையான வழியைத்தேடிக் கீர்த்தியையும் இலாபத்தையும் அடைந்து கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உ. ம. சே. முகையதீன் பிள்ளை ராவுத்தர்.

சுதேச ஏலக்கிருஷிக் கம்பெனி, சொந்தக்காரன், கோம்பை,

20-10-20.

இதுவே சங்கம் ஏற்படுவதற்குரிய ஆரம்பத் தூண்டுகோல். இத்துண்டுப் பிரசுரம் வெளியானதன்மேல் "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததைப்போல" வும், "தேடிப்போன பொருள் காலுக்கடியில் அகப்பட்டதைப் போலவும்" போடிநாயக்கனூரிலிருந்து ஏல விவசாயிகளின் முன்னேற்றத்திற்கான ஒரு வழியை உண்டுபண்ணுவதற்காக 16–3–21உ மாட்சிமை தங்கிய போடிநாயக்கனூர் ஜமீன்தார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மகா-ள-ள-ஸ்ரீ அ. சுப்பன் செட்டியாரவர்களின் பங்கஜவிலாச பங்களாவில் கூடப்போகும் ஏல விவசாயிகளின் கூட்டத்திற்கு எல்லா ஏல விவசாயிகளும் விஜயம் செய்யும்படி கனம் அந்தோனி ஆஜர் முதலிய சில கனவான்களுடைய பெயரோடு கூடிய ஒரு அச்சுக்கார்டு வெளியானது. ஷை கார்டில் குறிப்பிட்ட 16—3—21உ போடியில் ஒரு ஏல விவசாயிகளின் பொதுக்கூட்டம் முதல் முதல் நடைபெற்றது. அதற்கு எல்லா ஏல விவசாயிகளும் ஆஜராகவில்லை யானாலும், போடி, கோம்பையிலுள்ள சில முக்கிய கனவான்கள் ஆஜரானார்கள். அதில், எல்லா ஏல விவசாயிகளையும் ஒன்று சேர்த்து, திருவாங்கூர் ஏல விவசாயிகளின்

சங்கம் என்ற பெயரோடு ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டுமென்றும், கம்பம் வாசிகளையும் கேட்டுக்கொள்வதற்காக அடுத்த கூட்டத்தைக் கம்பத்தில் கூட்டவேண்டுமாயும் தீர்மானித்தார்கள். அதன்படி அடுத்த கூட்டம் கம்பத்தில் கூட்டப்பட்டது. ஷை கூட்டத்தில் அவர்களையும் அழைத்து ஒழுங்கு செய்யப்பட்டது. அதன் பின்னர் சங்கம் ஸ்தாபிதம் செய்வதற்கான முடிவு செய்வதற்கு எல்லா ஏல விவசாயிகளுக்கும் தகவல்கொடுத்துக் கோம்பையில் அடுத்த கூட்டத்தைக்கூட்டுவதென்று முடிவுசெய்து எல்லா ஏல விவசாயிகளுக்கும் ஷை கூட்டத்திற்குத் தவறாமல் விஜயம் செய்யவேண்டுமாய்த் தகவல் கொடுக்கப்பட்டது. இந்தத் தகவல் எல்லா விடங்களுக்கும் எட்டியவுடன் அதுவரை சந்தேகத்திலிருந்த வியாபாரிகளுக்கு இம் முடிவானது பயத்தை உண்டாக்கிவிட்டது. சங்கம் ஏற்படாமலிருப்பதற்காக அநேக கட்டுக்கதைகளையும், அதைரியம் உண்டாகக்கூடிய வார்த்தைகளையும் பரப்பிவிட்டார்கள். "யாரோ சிலர் பிழைப்பதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்வதாகவும், அதில் சேர்ந்தவர்களுக்கு "ரத்ன விலாசக் கம்பெனி" யில் அடைந்த கதிதான் ஏற்படுமென்றும், சூரியனைக் கையைக்கொண்டு மறைக்கமுடியுமா? வென்றும், ஆயிரக்கணக்கானவர்களை இவர்கள் தானு ஒன்று சேர்க்க முடியும் என்றும், இது நடவாத காரியங்களில் ஒன்றென்றும், என்னமோ இதில் சேருகிறவர்கள் யோசித்துச் சேருங்கள். அப்புறம் கெடுமேடு கெடு பள்ளம் வந்து சேருமென்றும், இவர்கள் செய்கிற தோரணை யானைக்குக் கோவணம்கட்ட ஆரம்பிப்பது போலிருக்கிறதென்றும் இம்மாதிரியான சமாச்சாரங்களைக் கிளப்பிவிட்டார்கள். இவைகளை நம்பின நமது சில ஏல விவசாயிகள் சங்கம ஏற்படுத்தக்கூடாதென்றும், ஏற்பட்டாலும் நானெல்லாம் அதில் சேரமாட்டேனென்றும் சொல்லிக்கொண்டதோடு பிரத்தியாரையும் தடுக்க ஆரம்பித்தார்கள். ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் இதற்கு இடம் கொடுக்காததாலும், முக்கிய கனவான்கள் தலையிட்டிருந்ததாலும் மேற்கண்ட ஆக்ஷேபனைகள் பலக்காமல் போனது. நமது 'கஷ்ட காலம கழியவேண்டிய நாளும் வந்து



கடவுளுடைய கிருபையும் ஒத்திருந்ததால் 1921-ம் வருஷம் ஜூலை௴ 1௳ கோம்பையில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு எல்லா ஏல விவசாயிகளும் விஜயம் செய்தனர். கூட்டம் செவ்வனே நடந்தது. கூட்டத்திற்கான ஏற்பாடுகள் மிகவும் ஒழுங்காகச் செய்யப்பட்டிருந்தன. இப்போதுக் கூட்டத்திற்கு மாட்சிமை தங்கிய நமது போடிநாயக்கனூர் ஜமீன்தார் T. V. K. காமராஜ பாண்டியரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பல கனவான்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க கனம் போடிநாயக்கனூர் ஜமீன்தாரவர்கள் சாஸ்வத பிரசிடெண்டாகவும், கனம் பொருந்திய (ராவ் சாகிப்) A. S. அழகணன் செட்டியாரவர்கள் சாஸ்வத போஷகராகவும் இருந்துவர ஒப்புக்கொண்டார்கள். திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்றும், அதில் எல்லா ஏல விவசாயிகளும் மெம்பர்களாகச்சேருவதுடன் அதின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும் சர்வ சம்மதத்தின்பேரில் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தின்மேல் 1921ம் வருஷம் ஜூலை௴ 29௳ நமது சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ரணபாதக இருளிலிருந்து விடுபட முடியாமலிருந்த ஏல விவசாயிகளுக்கு வெளிச்சத்தை அளித்த "திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்க" மென்னும் சூரியனானது பிரகாசிக்கத் துவங்கிற்று.

சங்கம் ரிஜிஸ்டர் ஆனவுடன் வியாபாரிகளுக்கும், தரகர்களுக்கும் உண்டான ஆக்ஷேபணைகளெல்லாம் அடங்கி விட்டன. சங்கம் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்தோங்க ஆரம்பித்தது. போடி முதல் கூடலூர் வரையுள்ள எல்லா ஏல விவசாயிகளும், திருவாங்கூர் வாசிகளும் இதில் மெம்பர்களாய்ச் சேர்ந்து விட்டார்கள். நமது சங்கத்தில் ஜனங்களுடைய சௌகர்யத்

தை உத்தேசித்துப் போடி, தேவாரம், கோம்பை, கம்பம் முதலிய நான்கு இடங்களில் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வருஷமும் பொதுக்கூட்டம் கூட்டி இந்த வருஷத்தில் இன்ன விலை ஏற்படுத்துவது என்று தீர்மானித்து அதன்படி கண்ட்ரோல் நிர்ணயிக்கப்பட்டு வந்தது.

ஏல விவசாயிகளும் அதற்குக் கட்டுப்பட்டுச் சங்கம் ஏலத்தில் விற்று வந்தார்கள். சங்கம் ஏலத்தில் தவிர சில்லரைச் சரக்குகள்கூடத் தனியாக வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் வருடந்தோறும் ஏற்படுத்தப்பட்ட கண்ட்ரோல் விலை நிலை பெற்று விலையேற ஆரம்பித்தது. சங்கம் ஏற்பட்ட 1921-ம் வருஷத்தில் அதாவது 1907 ஆண்டில் துலாம் ஒன்றுக்கு ரூ 10, 12 என்று விற்றுக்கொண்டிருந்த ஏலச் சரக்கை ரூ 20 கண்ட்ரோல் விலை வைக்க ரூபாய் 32 வரை விற்றது. 1922-ல் 30 ரூ கண்ட்ரோல் வைக்க ரூ 50 வரை விற்றது. 1923-ல் 40 ரூ கண்ட்ரோல் வைக்க ரூ 60 வரை விற்றது. 1924-ல் 50 ரூ கண்ட்ரோல் வைக்க ரூ 90 வரை விற்றது. இதனால், தோட்டத்தை விற்று அடைப்போமா? வீட்டை விற்று அடைப்போமா? என்றிருந்த கடன்களெல்லாம் தீர்ந்தது. நோயுற்றிருந்த தோட்டங்களையும், பழைய தோட்டங்களையும் புதுப்பித்துக்கொண்டோம். குச்சு வீடுகளை இடித்துவிட்டு, மச்சு வீடுகளைக் கட்டிக்கொண்டோம். நாகரீகமான நகை நட்டுகளையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் செய்தும், வாங்கியுமிருக்கிறோம். அத்துடன் பொது நன்மைக்கான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தும், மலைக்குப்போகும் பாதைகள், ஊர் ரஸ்தாக்கள் புதிதாகப் போடப்பட்டும், செப்பனிடப்பட்டும், போக்கு வரவு சாதனங்கள் உண்டுபண்ணப்பட்டும் இருக்கின்றன. மத சம்பந்தமான கோவில்கள் பொதுக் கட்டிடங்கள் முதலியவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் எவ்வளவோ சில்லரை நன்மைகளும் பல உண்டாயிருக்கின்றன. நம்மை அண்டி இலட்சக்கணக்கான



தொழிலாளர்களும் விருத்தியடைந்திருக்கிறார்கள். இவ்வளவு முன்னேற்றத்திற்கும் நமது ஒற்றுமையே காரணம். நம்மிடத்திலிருந்து வேறு வழியில் சரக்கு வாங்கி விலையைக் குறைப்பதற்கு இடமில்லாமற்போகவே, நாம் சொன்ன விலைக்கு வியாபாரிகள் வாங்கித்தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தூரங்களில் விலையைக் குறைத்தாலும், இங்கு குறைத்துக்கொடுக்கக்கூடிய நிலைமையில்லாததாலேயே நமது சரக்குகள் இதுவரை தேங்காமல் கூடுதல் விலைக்கு விற்று வந்தன. இம்மாதிரி விலையேறி விற்றுக்கொண்டிருந்த சரக்கானது 1925 ல் 50 ரூ கண்ட்ரோல் விலைக்கு விற்க முடியாமல் மொத்தம் (லாட்) சேர்க்கும்படியான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டோம். இதற்குக் காரணம் என்ன? இதில் தான் நமது ஒற்றுமையின்மையும் வியாபாரிகளின் தந்திரங்களும் சாமர்த்தியங்களும் அடங்கியிருக்கின்றன. எப்படியென்றால் இப்போதுள்ள ஏலச்சரக்கு வியாபாரிகள் நம்மிடத்தில் வெகுகாலமாகக் குறைந்த விலைகளுக்கு வாங்கி அதிக இலாபத்திற்கு விற்று அனுகூலத்தை அடைந்தவர்கள், இப்போதுள்ள கண்ட்ரோல் வழக்கப்படி வாங்கி விற்பதில் பழைய இலாபத்தைப் போல் அடைய முடியாது. ஏனென்றால் விலையேறக் கண்ட்ரோலையும் உயர்த்தப்படும். அதனால் சொற்ப இலாபமே கிடைக்கும். இப்படிப்பட்ட வியாபாரம் செய்வதில் நமது வியாபாரிகளுக்கு இஷ்டமில்லை. இதிலிருந்து இரண்டு சம்பவங்களை எதிர் பார்க்கவேண்டும். அதாவது வியாபாரிகள் கேட்கும் விலைக்குச் சம்சாரிகள் சரக்கைக் கொடுக்கவேண்டும்; அல்லது வியாபாரிகள் சரக்கு வியாபாரத்தை நிறுத்தி விட்டு வேறு தொழிலை ஆரம்பிக்கவேண்டும். நம்மைப் பொறுத்த மட்டில் கட்டும்படியான விலைக்குக் குறைத்துக் கொடுக்கப்போவதில்லை. ஆனால் ஒரு தொழிலில் பழக்கமடைந்த வியாபாரிகள் அதைச் சீக்கிரத்தில் விட்டு விடுவதென்பதும் முடியாத காரியம். எப்படியாவது அனுகூலத்தை அடையத்தகுந்த முயற்சிகளைச் செய்வார்களேயொழிய

பழக்கப்பட்ட ஒரு தொழிலைச் சட்டென்று விட்டுவிடுவது எவருக்கும் கஷ்டம். இதனால் வியாபாரிகள் எதிர் பார்த்தே இருந்து வந்தார்கள். சங்கத்தின் கட்டுத் திட்டங்கள் சரியாயிருக்கும் வரை நாம் சொன்ன விலைக்கு வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் சங்கம் போராடிக்கொண்டிருக்கும் போது இன்கம்டாக்ஸ் வரிக்குப் பயந்த திருவாங்கூர் வாசிகளாயிருந்த சில மெம்பர்களும், சொந்த மனஸ்தாபங்களை முன்னிட்டுக் கொண்டு இங்குள்ள சில மெம்பர்களும் சங்கத்தை விட்டு விலகினதோடு அவர்களுடைய சரக்குகளையும் தனியாக விற்க ஆரம்பித்தார்கள். இந்த வழி விழுந்தவுடன் சமயத்தை எதிர் பார்த்திருந்த வியாபாரிகள் தங்கள் வியாபார தந்திரத்தை ஆரம்பித்து விட்டார்கள். "கண்ட்ரோலைக் குறைத்து வைத்தாலொழிய சரக்கை வாங்க மாட்டோமென்று இருந்து கொண்டால், நாம் கேட்கிற விலைக்குக் கொடுக்கட்டும்; இல்லாவிட்டால் சரக்குகள் தேங்க ஆரம்பிக்கும்; அப்படிப்பட்ட சமயங்களில் தனிப்பட்டவர்களுடைய சரக்குகளை வாங்கித் தூர விலையையும் கெடுத்து விட்டால் சங்கத்திலகப்பட்ட மெம்பர்கள், விலை யிறங்கி வருவதையும், பிரிந்து கொண்டவர்களெல்லாம் தங்கள் சரக்குகளை விற்றுப் பணம் முடியப்போவதையும் பார்த்தால், சங்கத்தில் கிளர்ச்சி செய்ய ஆரம்பிப்பார்கள். அதிலிருந்து தங்களுக்கு அனுகூலமான முறையை உண்டாக்கிவிடலா"மென்ற யோசனையுடனேயே 1925ல் 2, 3 ஆக்ஷன் வரை 60, 70 ரூ வரை விற்றுக் கொண்டிருந்த சரக்கை விலை குறைத்து, ஏற்படுத்தப்பட்ட 50 ரூ கண்ட்ரோலுக்கும் 45 க்குக் குறைத்து வைக்கும்படி கேட்டார்கள், ஆனால் நாமோ?

(இன்னும் வரும்)

**T. B. கிருஷ்ணஸ்வாமி,**
தாலுகா போர்டு மெம்பர், பணப்புரம்.

---



## மைசூர் மன்னரின் ஸ்ரீமுகம்.
## வெள்ளி விழா.

எனது ஆட்சியின் 25-வது வருஷம் முடிவாகும் தினமாகிய இன்று எனது அன்பு மிக்க பிரஜைகளில் ஒவ்வொருவருக்கும் அவர்கள் சுகமாக வாழவேண்டுமென்று எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புகிறேன். விடாமுயற்சியுடன் உயிருள்ளளவும் நான் அவர்களுடைய க்ஷேமத்தை விருத்தி செய்யவே முயற்சிப்பேன். எனது வாழ்க்கையிலும், ஆட்சியிலும் எனது உன்னத லட்சியமாகிய இந்தக் காரியத்தை நிறைவேற்றப் போதுமான பலமும், அறிவும், ஒளியும் எனக்கு அளிக்குமாறு நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

மஹாராஜா சர் கிருஷ்ணராஜ உடையார்.

---

குறிப்பு:—

1884-௵ ஜூன்௴ 4௳ பிறந்து, 1902-௵ மாட்சிமை தங்கிய மஹாராஜா சர் கிருஷ்ணராஜ உடையார் மைசூர் மன்னராகப் பட்டமேற்றுக்கொண்டதிலிருந்து, இன்றளவும் 25 வருடங்களாகின்றன. இவ்வரசர், தம் குடிகளுக்குக் கணக்கற்ற நன்மைகளைச் செய்திருக்கிறார். மங்கிக்கிடந்த மைசூர் சமஸ்தானத்தைத் தங்கமயமாகப் பிரகாசிக்கச்செய்திருக்கிறார். குடிகளுக்காக ராஜாவேயன்றி, ராஜாவுக்காகக் குடிகளல்லவென்பதை இவர் நிரூபித்து விட்டார். இந்தியாவில் சுதேச மன்னர்களில் அரசர்க்குரிய சகல லட்சணங்களும் பெற்று விளங்குகிறார். நமது திருவாங்கூர் சமஸ்தானத்திலோ? மைசூர் சமஸ்தானத்தின் விருத்தியைப்பற்றி நமது மாசிகையில் ஒரு வியாசம் அடுத்த மாதத்தில் வெளிவரும்.

ஆசிரியர்.

## புத்தர் பிரானது அமிர்த மொழிகள்.

1. ஒரு விஷயத்தை நல்லதென்றாவது கெட்டதென்றாவது கேள்வி மாத்திரத்திலே நம்பிவிடாதே
2. உண்மையாக நடந்திருக்காவிட்டால் எழுதி வைத்திருப்பார்களா என்கிற காரணத்தினாலேயே ஒன்றையும் உண்மையானது என்று நம்பிவிடாதே.
3. அநேக இடங்களில் வழங்கப்பட்டு பாரம்பரியமாக நடந்து வருகிற ஐதீகம் என்கிற காரணத்திற்காக ஒன்றையும் நம்பி விடாதே.
4. அநேகர் நம்பி அதன்படி நடக்கிறார்களே என்கிற காரணத்திற்காக உண்மை என்று எதையும் நம்பிவிடாதே.
5. ஒரு மகாத்மாவால் வரையப்பட்ட கதை என்று காட்டப்பட்டதினாலேயே நம்பிவிடாதே.
6. நமக்கு ஒன்று ஆச்சர்யமாய்த் தோன்றப்படுவதினாலேயே இது தேவனாலோ அல்லது அற்புதமான ஒருவனாலோ ஆக்கப்படிருக்கவேண்டும் என்று கற்பனை செய்துகொண்டு நம்பிவிடாதே.
7. பெரியோர்களாலும், குருமார்களாலும் சொல்லப்பட்டது என்கிற காரணத்தினாலேயே நம்பிவிடாதே.
8. ஒவ்வொரு விஷயங்களையும் நடு நிலையிலிருந்து ஆராய்ச்சி செய்து, சகலருக்கும் நன்மை தரத்தக்கதாயிருந்தால், அப்பொழுது அதை ஒத்துக்கொள்;பின்பு ஒத்துக்கொண்டபடியே நட.



ஒரு விளம்பரம்.

# இனாம்! இனாம்!!

## 10,000 ரூபாய் இனாம்!!!

## குணம் இல்லாவிடில் பணம்!

கை கண்டது! கைச் செலவற்றது!!

# ஓர் அற்புத மை.

கனவான்களே,

நீங்கள் எத்தனையோ மைகளைப் பார்த்திருப்பீர்கள். வாங்கி உபயோகித்திருப்பீர்கள். நமது "மை" அவைகளைப்போலல்ல உலகத்தில் கருப்புமை, சிவப்புமை, அஞ்சனமை, வசியமை, முதலிய அநேக விதமான மைகளுண்டு. நமது மையோடு இவைகள் எந்த விதத்திலும் ஈடாக முடியாது. மற்ற மைகள் சில தனிப்பட்ட விஷயங்களுக்குத்தான் உபயோகப்படுவதோடு பல கெடுதிகளுக்கும் ஆளாக்கிவிடும். ஆனால் நமது "மை"யோ சகலத்திற்கும் உபயோகப்படுவதோடு கெடுதியை விளைவிக்கக்கூடிய நோய்களை வேரறுக்கக்கூடியதென்று துணிந்து கூறலாம். அன்றியும் இதனால் சாதிக்க முடியாத காரியமே உலகத்தில் கிடையாது. ஒரு முறை நமது "மை"யின் அனுபவத்தை, அருமையை, ஆற்றலை அறிந்தவர்கள் வேறு "மை"களை என்றும் நினைக்கவே மாட்டார்கள். அப்படிப்பட்ட சிறந்த முறையில்

மகான்களால் கண்டு பிடிக்கப்பட்டது. நமது "மை" அநேக யுகங்களாக மதிப்படைந்து வந்திருக்கிறது. பழுத்த தேசாபிமானிகளாயுள்ளவர்கள் உபயோகிப்பதெல்லாம் நமது 'மை' யையே. இதை உபயோகித்தவர்கள் கெடுதல் அடைந்ததே கிடையாது! மகாத்மா காந்தியவர்கள் நமது 'மை' யின் மேன்மையை அறிந்தது முதல் நமது தேசத்தாருக்கு நமது 'மை' யை உபயோகிக்கும்படி உபதேசம் செய்து வருகிறார்கள். இப்போதும் நம் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது நமது 'மை'யைப் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டுதானிருக்கிறார். நமது 'மை' யின் குணத்தைப்பற்ற மகா பெரிய மேதாவிகளெல்லாம் நமக்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் பிரசுரிப்பதென்றால் இந்த ஏல விவசாயப் பத்திரிகையில் இடம் கிடையாதென்று விட்டு விட்டோம். அதிகம் சொல்வானேன். உலகமெல்லாம் நமது மையின் அருமையை, பெருமையைப் பற்றியே பேச்சாயிருக்கிறது.

ஏல விவசாயிகள் இம்மையிலுள்ள நன்மைகளை அடையும் பொருட்டாக நமது (கிளை பிராஞ்ச்) ஒன்றைக் கோம்பை T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனை கம்பெனியோடு இணைத்திருக்கிறோம். வேண்டியவர்கள் அங்கு வந்து அடைந்து கொள்ளலாம், இதைத்தவிர நம்மிடத்தில் இன்னும் சில 'மை'களிருக்கின்றன. விஷய மறிய விரும்புவோர் எழுதித் தெரிந்து கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**T. B. கிருஷ்ணஸ்வாமி.**

15968

திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு ஏற்ற துணைவன் எவன் ?
ஏல விவசாயிகளுடைய நலம் நாடிச் சலியாது
உழைப்பவன் எவன் ?
ஏல விவசாயிகளின் நிலைமையை உள்ளபடி
உரைப்பவன் எவன் !

# அவனே "ஏல விவசாயி"

ஆகையால் அவனை ஆதரியுங்கள்.

---

குறைந்த விகிதம் ! நிறைந்த இலாபம் !!
நல்ல இடம் ! நாணயமான கனவான்கள் !!

உங்களுக்கு
அதிக இலாபம் அடைய ஆசையா ?
உங்கள்
வியாபாரத்தை விருத்தியாக்க விருப்பமா ?
உங்கள் பெயரும் பொருளும் ஏல விவசாயிகள்
வீடுகளிலெல்லாம் உலாவ இஷ்டமா ?
பின் ஏன் தாமதிக்கிறீர்கள் ?
உடனே "ஏல விவசாயி" யில்
விளம்பரம் செய்யுங்கள்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, ,, | ,, | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு ,, ,, | ,, | 3—0—0 |

எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.
நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"ஏலவிவசாயி,",
உத்தமபாளையம், மதுரை ஜில்லா,